உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

இராசவல்லிபுர மென்வழங்கும்

செப்பறை மான்மியம்.

வசனம்.

இஃது

செப்பறைவாசி

சங்கரசுப்பிரமணியபிள்ளையவர்களால்

இயற்றப்பட்டது.

(இத்துடன் ஸ்ரீ அழகியகூத்தர் தோத்திராட்டகமும்

திருவாவடுதுறைச் சிவஞானயோகிகள் அருளிச்செய்த

ஸ்ரீ அகிலாண்டநாயகி தோத்திரமும்

சேர்க்கப்பட்டுள்ளன.)

முதற்பதிப்பு

ஷை யூர்ச் சனசமுகத்தின் பொருளுதவிகொண்டு

இந்நூலாசிரியரவர்களால்

திருநெல்வேலி

நூருல் இஸ்லாம் பிரசில் பதிப்பிக்கப்பட்டது.

ரிஜிஸ்டர்ட் காப்பிரைட்.

பிரதிகள் 1000

1905

இதன் விலை அணா 3

32/1
8143
Q1:38
கோவிலூர் KOVILOOR MADALAYAM மடாலயம்

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சிறப்புப்பாயிரம்.

யாழ்ப்பாணம் சிதம்பரசுவாமிகளால் அருளிச்செய்யப்பட்டது.

பாண்டிவள நாடதுவே பழம்பதியா மெனப்பரம
னாண்டமாமணி யருள்செய் யரியதிரு நாடதனு
மாண்டதிரு நெல்வேலி வடகீழ்பாற் சுந்தரஞ்சேர்
தாண்டவனற் செப்பறையாம் ராசைநகர் தனில்வாழ்வோன். (க)

ஞயமேவு நமசிவய நரேந்திரனற் றவத்துதித்தோன்
பயமேவு நாற்குணமும் பணிகேட்கும் வாசுகிநேர்
நயமேவு வடிவம்மைச் சார்பின்முயல் வாருலா
மியன்மேவில் வாழ்க்கையினு னெய்தியுளோன் றலைமையதே (உ)

கடன்றிரண் டமவங்கி காதலன்செய் நூன்முதலா
மடனறுக்கு மிலக்கணமற் றிலக்கியநற் றருக்கமது
வடமொழிதென் மொழிமுதல வரம்புகண்டோன் பரசமயத்
திடைநூலும் பொருணூலு மெந்நூலும் புராணமுமே. (௩)

முன்னொளி னுமியற்று முப்பானூன் முறையொழுக்க
மின்னாளி னருகியதா லினிச்சின்னாட் செவிநெறிய
மன்னேனவென் றிரங்கிமிக வதுமறித்துந் தெரிந்திடுவோன்
சேந்நாட்போ தார்தாமே திருவடிவொன் றெடுத்தனையான். (௪)

சிவமாகுங் கண்மணியுந் திருநீறு மைந்தெழுத்துஞ்
சிவமாகும் பொருளாகக்கொண்டொழுகுந் திருவுடையோன்
சிவமாகு மடியவர்தஞ் சீலமுழு துணர்ந்துடையோன்
சிவமாகுஞ் செயன்முன்னாப் பின்னெழுகுந் தெளிவுடையோன். (௫)

என்றொன்று கொல்லெனுஞ் சொன்னிகழ்ந்த யவையத்தின்
முன்னுதவு தந்தையினுக் காற்றுதவி முற்றியுளோன்
தன்னீன்ற பொழுதினினும் பெரிதுவப்பித் தோன்றாயைப்
பின்னூன்றே னெனக்கேட்பித் தறிந்த மகப்பேறிதுவே. (சு)

நீலகண்ட தேசிகனார் நீண்டநாண் முன்னியற்று
நூலகண்ட பாடியத்தை நுனித்துமொழி பெயர்த்துள்ளோன்
மேலகண்ட கதைவடிவி னியற்றினோன்மிகும்பிரம
ஞானகண்ட னிகர்சுத னியர்கீதை யவையிரண்டும். (எ)

செப்பறைய வனவிச்சி தேயுவறி வாருளமுற்
செப்பறைய மறைமுடியன் சிரமாலை மழுவுமுதற்
செப்பறைய சரக்குமனத் தருணைமுனி திருவருடஞ்
செப்பறைய தனநசையி றிருக்கூட்டச்செறிவுடையோன். (அ)

காசிசிதம்பரங்காஞ்சி யாலவா யருணைமுது
காசிசிதம்பரங் காசிக் கங்கைவரும் பதியாகுங்
காசிசிதம்பரமாரூர் காளத்தி யாலவனங்
காசிசிதம்பர மூர்த்தி தலந்தீர்த்தங் காண்முறையோன். (கூ)

கல்லாநன் னூல்கழித்துத் தலையாயோன் கற்றறக
நில்லாஅத் தொழும்பயனு நேர்வாய்த்தோன் கல்வியின்பங்
கல்லாத வுலகுறுத்திக் காமுறப்போன் நற்றுளரை
யில்லாஞான் றுள்ளுவிப்போ னியைதருஞான் றுவப்பிப்போன். (ய)

வேறு

காதலித் தறஞ்செய் வார்க்குக் கவசமுங் கண்ணுமாகி
யாதுலர்க் கன்னை யாகி யத்தனு யடிக ளாகி
யோதுவிப் போனு மாகி யுடன்பிறந் தோனுமாகிக்
காதிடுந் துன்பமெல்லாங் கண்ணிமை யொத்தெனக்கும். (யக)

வேறு

மைஞ்ஞான்ற கண்டனடி மனம்வாக்குக் காயத்தா
னெஞ்ஞான்று மெண்ணல் செப்பலி யற்றலய ராதேய்ந்து
பொய்ஞ்ஞானக் களைபோக்கிப் பொருளன்பா நீர்பாய்த்தி
மெய்ஞ்ஞான விளைவு சிவ வனுபூதி மேவியுளோன். (யஉ)

வனிக்காடுங் கூத்துடையோன் மாநகர வாசிகண் முன்
முனிக்காடு நைமிசத்தின் மொழிகுதன் வடமொழியித்
தனிக்காதை தமிழ்மொழியிற் றருகவெனத் தந்தனனு
லினிக்காது பிறசுவைநன் கினியகதை வடிவதனுன். (௰௩)

வேறு

நங்கையுமை யீயிரண்டு நாழிவரி யானுலகை நன்கு செய்தோர்
மங்கைதன்னு னுயிரிழந்த வணிசனுக்கா வுயிர்விடுத்து வாய்மை கா [த்தோர்
தங்கைநட்ட முடிதிருத்தித் தலைவர் முடியுந்திருத்துந் தகைமை வா [ய்ந்தோர்
அங்கணில முழுகோலா னரசர்கோல் செங்கோலா வளிக்கு நீரார். (௰௪)

இங்கிவர்யா ரெனிற் காத்தா ரெழிலிதனை விடுவித்தவ் வேதுவானே
கங்கை குலதிலகராய்க் கார்காத்தா ரெனப்புகலுங் காட்சிமிக்கார்
அங்கவர்தம் பெருமைசொல வனந்தனுக்கு மரியதவர் குலத்துளான் [ரேன்
சங்கரசுப் பிரமணியன் புலவர்சிகா மணிசைவத் தலைமையோனே (௰௫)

பார்ப்பதியம்மை பயந்த விவன்றென்மொழியுட்
பேர்த்தவிந்நூல்வேண்டும் பெரிதுமே—யார்க்கு நிதஞ்
செப்பறை வாணன் திருக்கூத் துவந்தருளு
மப்பொற் பதிநல் லவை. (௰௬)

சிறப்புப்பாயிரம் முற்றிற்று.

உ

சிவமயம்.

செப்பறை மான்மியம்.

உபோற்காதம்.

இந்திரன் முதலிய இறைவர் பதங்களும், அந்தமிலின்பத்தழிவில்வீடும், நெறியறிந்தெய்தற் குரியமாந்தர்க்கு உறுதிபென உயர்ந்தோரானெடுக்கப்பட்ட அறவாயின் மூன்று அவை மூர்த்தி தலம் தீர்த்தமென்பனவாம். அவற்றுள்;

மூர்த்தியாவது;—படைப்புக் காலந்தொட்டுத் துடைப்புக் காலமட்டும் நிலைபெறுடைத்தாய், வழிபட்டார்க்கு வீடு பயப்பதோர் இலிங்க விசேடமாம்.

இலிங்கம், தோற்றவொடுக்கம், முதலிய ஐந்தொழிலானே, உலகத்தைச் சித்திரித்தல் என்னும் பொருட்டு அவ்வைந்தொழில் செய்யும் முதல்வனுக்கு, வடிவமின்றியமையாமையின் அவன் வடிவம் முத்திறப்படும். அனாதி முத்த சித்துரு வெனப்படும். அனற்பஞானத்தொழின் முதலுடையனாய் அப்பசுபதி, கட்டு, வீடு, எழுவாய், இறுவாய், பரதந்திரமாதன் முதலிய குற்றங்களிலனாய், சுவதந்திரம், முடிவிலாற்றன் முதலிய குணங்கள் உடையனாகலின், அனாதிபெத்த சித்துருவென்னப்படும். அற்பஞானத்தொழின் முதலுடைய நம்மனோரது ஏகதேசப்படுந் தகுதியுடைய மாயாவடிவம்போலாத, ஏகதேசப்படுந் தகுதியில்லாததனது சத்தியானே, விகாரமுறாது,

தானினைந்ததொரு திருமேனிகொள்ளும். அற்றேல் அக்குற்றங்களிலனாய அவன், உருவமின்றி நின்றே எத்தொழிலுஞ் செய்ய வல்லுமாகலின், உருவங்கோடலாற் போந்தபயனென்னையெனின், பிரளயாகலர், சகலர் என்னும் பசுவருக்கம் இரண்டும், முறையே, முன்னிலையினும். படர்க்கையினும், நின்றுணர்த்தினன்றி, உணரமாட்டாமையின், அவை பொருளியல் புணர்ந்து வீடுபெறுமாறு, வேதாகமங்களைக் கோவைப்படச் செய்தற்பொருட்டும், அவற்றைக் குருபரம்பரையின் வைத்தற் பொருட்டுமே, திருமேனி ஒரு தலையான் வேண்டப்படுமென்பது. அதுஉயிரின் பொருட்டுக்கொண்டதோர் அருள்வடிவமாகலின் அவன் சிந்திதனாயினும், அசிந்திதனேயாமென்பது. அற்றேல் வாக்குமனாதீதகோசரபாய அவ்விறைவன் திருமேனி கொண்டருளிய வழியும், சுத்த தத்துவ புவனத்தினன்றி ஈண்டு வைகுதலின்மையின், அவனை ஈண்டுள்ளார் கண்டு பூசிப்பதாமாறியாங்ஙனமெனின் சதாசிவ தத்துவத்துள் வைகும் அவ்விறைவன் புறத்தே திருக்கோயிலுள்ளிருக்குந்திருமேனியும் திருவேடமு, மாதாரமாகக்கொண்டு நின்றும் அகத்தேயுயிரிடமாகக்கொண்டு நின்றும் ஈண்டுள்ளார் செய்யும் பூசைகொண்டருளுமாகலின், அஃதறிந்து அவ்விடங்களில் வழிபடுகவென்பது. அவன் இங்ஙனம் தனதுசத்தியுட்காணப்படும் வடிவங்களெல்லாம் தானாகத்தோன்றி தம்முள் வேற்றுமையின்றி நிற்பன். அவ்விறைவன் இவ்வாறு சத்திசிவமெனத் தன்னுள்ளே, இருவேறுவகைப்பட்ட தன்மைகள் வைத்தலானன்றே, பலவேறுவகைப்பட்ட உயிர்வடிவங்கள் அனைத்தும், குறியானும், குணத்தானும், ஆண்பெண்ணென, அவ்வவ்வியோனிக்குள், இருவேறு வகையாயடங்கி, தம்முட் கூடிக்களித்து வாழாநின்றன. ஆ

கலின், இங்ஙனமாய வாழ்வெல்லாம் சிவசத்தி மணந்ததனு ஞயவாழ்வென்பதறியப்படும். அச்செல்வம் இலிங்காங்க பகாங்கமாம்படி,சிவமும்,சத்தியுங்கொண்டருளிய,ரூபாரூப மெனப்படும் பீடலிங்கவடிவமே, அங்ஙனம் இருவேறா வகைப்படவைத்ததனை,கண்கூடாய்அறியச்செய்தல் சான்றென்பது. இஃதறியாதுபிணங்கும்பேதையர் என் கடவர்? அம்மடவோர்க்கு ஒருவாற்றானும்உணர்த்தும் வாயில் இன்றுமென்பது.ரூபாரூபமாவது:—அருவமெனப்படும் சூக்குமப் பொருள்உருவமெனப்படும் தூலாவத்தை எய்தும்போது, அவ்விரண்டிற்கும் பொதுவாயதோர் அவத்தாவிசேடமாம். ஆகலின் அவ்வடிவம் மூன்றும் வேறுபொருள் அன்மையின், நந்தம் கருமேனி கழிக்கவந்தகருணைவடிவமேயாமென்பது. அற்றேல் அஃதவ்வாறுதலி யாங்ஙனமெனின்? உலகத்தோடொட்டவொழுகும் ஒழுக்கமுதலிய நன்மைகளுடையனாய் அவற்றை மறுதலைத்த தீமைகளைநீக்கி யொழுகுவான் ஒருவனுக்கு தன் கருத்துக் கியைந்ததொரு கடவுளை, மனம், மொழி மெய்களான் வழிபட்டொழும் செயலாகிய அறமும் உளதாயின், முன்னைப்பழம் பொருட்கும் முன்னைப்பழம்பொருளாய சிவபிரானே, அத்தெய்வத்தின் இடமாகநின்று, அச்செயலை ஏற்றுக்கொண்டு பயனுதவுமென்பது. அற்றேல் வழிபட்டார்க்கு வழிபட்ட அவ்வத் தெய்வமே, பயன்கொடுக்க வற்றென்றாற்படு மிழுக்கென்னை யெனின்? நால்வகை யோனியுள் ஒரு யோனி வாய்ப்பட்டுப் பிறப்பன யாவை அவை யெல்லாம் பசுவருக்கம். அவ்வாறு பிறத்தலில்லது யாது? அது பதிப்பொருள் என்னு மிதுவொன்றே, வினைச்செயல்களான் வேற்றுமை யறியவாராத அவ்விரண்டிற்கும் தம்முள் வேற்றுமை அறியகிற்பதாம். அற்றேல் பயனளிக்கும் அப்பதிப்பொருள், மாயோன்

முதலிய ஏனைத்தேவருள் ஒருவரெனக் கோடுமெனின், அத்திருமான் முதலிய ஏனைத்தேவரெல்லாம், பிறந்திறக்கும் பசுக்களெனக் கேட்கப்படுதலானும், பதிப்பொருளாய சிவனுக்கு, அஃதுண்டென்பது யாண்டானுங்கேட்கப் படாமையானும், சிவனொருவனே வினைவயத்தனாதலின்றி, அவ்வத்தேவரிடமாக நின்று, உயிர்கட்கு,அவற்றையறிந்து கூட்டவல்லுவன். இங்ஙனமாகலின் ஏனைத்தேவர் அது செய்யமாட்டாரென்பதுதானே போதரும். அற்றேல் ஒருவனை வழிபட, மற்றொருவர் பயன்கொடுத்தல் உலகத்துட் கண்டிலமாலெனில், அறியாது கடாயினாய்; பசு பார்ப்பார் தந்தை தாய் முதலாயினானை, இம்மைக்கண் வழிபட்டார்க்கு, பயன்றருங்கடவுள் வேறென்பது எல்லார்க்கும் ஒப்ப முடிந்தமையின், அது காணாமையாண்டையதென்க? ஈண்டும் அவ்வாறுதல் அமையும். அற்றேல் தம்மை வழிபட்டார்க்கு, அவ்வத்தேவரே எதிர்தோன்றி நின்று, பயன்கொடுத்தாரெனவும் ஆண்டாண்டுக் கேட்கப்படுதலின், அவரும் அதற்கு வல்லுநர்போலுமெனமலையற்க: அரசனாணையே அமைச்சர் முதலாயினார் மாட்டும் நின்று பிறர்க்களிக்குமாறுபோல, முதல்வனே தன்னாணையை, தன்னேவல்வழி நிற்கும் அக்கடவுளர் மாட்டு வைத்துப் பயன்கொடுக்கும். அவ்வாறன்றி, தாமே வினைத்தொடக்கிற் பட்டுப் பரதந்திரராய் நிற்கும் அக்கடவுளர் பிறருக்குப் பயன் கொடுக்குமாறியாண்டையதென்பது. இத்துணையுங் கூறியவாற்றான் ஏனைக்கடவுளர் மாட்டுச் செய்யும் வழிபாட்டினையும், ஏற்றுக்கொண்டளிப்பவன் சிவபிரானென்பது பெறப்படும்; படவே, அவனை வழிபடுதலே நல்லதோர் அறமும், அவனையன்றிச் செய்வனவெல்லாம் வினையென்பதுபோதருதலானும், புண்ணியமாவது வேதா

கமங்களுள் அவ்விறைவனுன் விதிக்கப்படும் விதியாகலா னும், ஒன்றினும் விருப்பிலனுயும், உயிர்கண் மாட்டுக் கருணைபூண்டு விருப்பஞ்செய்யும்மூர்த்தியெனப்படும் அவ் விறைவன் திருவடிப் பூசனையே, ஒரு தலையாகச்செய்யற் பாற்றென்பது. அற்றேல் "சராசரமாய் இவ்வுலகம் தேவ தேவனது சரீரமாம்; பசுக்கள் பாசத்தடிப்பானே இப்பொ ருளை அறிந்தில; அறிவு அறியாமை வடிவமாகிய எல்லா வுலகமும் வியாபகனுய லோக பிதாவினது வடிவம். இப் பொருட்கண் அய்யப்பாடு இன்றும்; என்னை? உலகமெல் லாம் அவன் வசமாகலின்" என்னும் புராண வசனத்துள் ளும் நின்ற திருத்தாண்டகத்துள்ளும்எல்லாம் அவனெனக் கூறுதலானும், திருவுருத்திரத்துள், பகுப்பின்றி உயிர்ப் பொருள் உயிரில் பொருள் எல்லாவற்றையும், தனித்தனி யெடுத்தோதி வழிபாடு கூறுதலானும், ஈண்டிதனை மாத் திரையே விதந்து கொண்டோதிய தெற்றுக்கெனின்? மரத் தடியின் கண் வார்த்த நீரானே, அதன் சாகைகளெல்லாம் வளருமாறுபோல, அவன் பூசையானே அவன் சரீரமாய உலகம் வளருமென்பது. அல்லதூஉம், பசுவினது சரீர மெல்லாம் வியாபித்தபால், முலைவாயில் ஒன்றானேயே வெ ளிப்படுமாறுபோல, திருக்கோயிலுள்ளிருக்கும் திருமேனி யின் கண்ணேயே, எங்கும் உருக்காண வொண்ணுத பரன் வெளிப்பட்டருளுவன். ஆகலின் அம்மேனியினன்றி அடிப் பட்டுவரும் அன்புவிளையாமையின், ஆண்டுச் செய்யும் வழி பாடே கருமேனி கழித்தற்கேதுவாய, அத்துவித ஞானத் தை நிலைபெறச் செய்து வீடுபேற்றைப் பயக்குமென்பது. ஈண்டு பூசையென்றது உபலக்கணம் என்னை? ஏனைத்தலை மையில் பணிகளும் அடங்குதலின்.

இனி, தலமாவது:—தன் மாட்டுத்தோற்றன்முதலி

யன செய்யும் உயிர்க்கு விடு பயப்பதோர் நில விசேடமாம்.

இனி, தீர்த்தமாவது:—தன்மாட்டு ஆடன் முதலியன செய்யும் உயிர்க்கு விடுபயப்பதோர் சல விசேடமாம்.

படைப்புக்காலத்து, இறைவன் இம்மூர்த்தி தலம் தீர்த்தமாய திருமேனிகொண்டு, அவற்றுள் முன்னையதைப் பூசித்தல் தரிசித்தல் முதலியன செய்யினும், இடையதன் கண் தோன்றல், மரித்தல், காண்டல், வசித்தல், நினைத்தன் முதலியன செய்யினும் பின்னையதன் கண், மீன் முதலியனவாய் அன்னனஞ் செய்யினும், அதன் கண், மனுடர் முதலியோர் ஆடல், பருகல், தீண்டல், தெரித்தன் முதலியன செய்யினும், அது பாய்ந்து விளைந்த நென் முதலிய பதார்த்தங்களை அவ்வுயிர்கள் நுகர்தன் முதலியன செய்யினும், சிவலிங்கப் பெருமானுக்கு அருச்சனை, அபிடேகம், நைவேத்தியங்கட் குறித்தாய, மரம், பசு, நென் முதலியனவாய்த் தோன்றினும், பணிசெய்தற்குரிய மனுடர் முதலிய சரீரங்களாய் உளவாகப்பெறினும், இன்னும், இன்னோரன்ன பிறவழியானும் விடு பயத்தற்கேதுவாய சிவ புண்ணியங்களை அளிக்கும்.

ஆகலின் இவ்வறவாயின் மூன்றுமறிதல் உயிர்கட்கின்றியமையாதாம். அவை இந்நூலுட் கூறப்பட்டன.

அவை பெரும்பாலும், வடமொழி தென்மொழிகளில் செய்யுணடைக்கண் உண்மையானும், அவற்றை, ஆதரிப்பார் இன்மையானும், மிக்கபொருள் வரவிற்கேதுவாகாமையானும் அவற்றைக் கற்றுணர்வோர் மிகவும் அருகிவரும் இக்காலத்து, அவை கற்றோர்க்கன்றி மற்றோர்க்குப் பயன்

படாவாகலின், இச்செப்பறைத் தலமான்மியத்தினைச் செந்தமிழிற் செய்தல் வேண்டுமென, இத்தலவாச முடையார் கேட்டுக் கோடல்பற்றி அதனுக்குடன்பட்டு, ஆறுமுகநாவலரவர்கள் முதலியோர், மேற்கூறிய ஏதுக்களான் இவ்வசன நடையே நன்றென, எடுத்தாண்ட வழியே வழியாக, எனது சிற்றுணர் விற்கு புலப்பட்டவாறே செய்துளேன். இம்மான்மியம் வடமொழியுள், இஞ்சாவன மான்மியம் கூறலுற்றுழி, உடன்வைத்துக் கூறப்பட்டுளது. இதனை அநுசரித்துத் தென்மொழிப் புராணமொன்று, காஞ்சிபுரம் ஏகாம்பரநாத தேசிக சந்தானத்து, சங்கரலிங்கதேசிகரவர்களாற் செய்யப்பட்டுளது. அவை தம்முள், ஒரு தலைப்படாது, ஆண்டாண்டுத் தம்முள் விரவிக்கிடந்த இம்மான்மியம் மூன்றனையும், மூர்த்தி, தலம், தீர்த்தமென இம்முறையே பகுத்துவைத்தும், விரிதல் இன்றியமையாதாய்ச் சுருங்கிக் கிடந்தவற்றை, புராணங்களுட் பிறண்டு விரித்தவாறே விரித்தும், வேண்டாது விரிந்தவற்றைச் சுருக்கியும் இன்னோரன்ன பிறவழியானும்,இந்நூல் செய்யப்பட்டுளது. இதன்கண்உளவாயசொல்வழூஉக்களையும், பொருள்வழூஉக்களையுங் களைந்து சிர்திருத்தஞ் செய்ததூஉ மன்றி, சிறப்புப்பாயிரம் ஒன்று செய்துபரிகரித்த யாழ்ப்பாணம் சிதம்பரசாமிகள்செய்துள்ள நன்றி மிகவும்பாராட்டற்பாற்றேயாம். இவ்வுபோற் காதத்துள் எடுத்துக்கொண்ட பொருள் நீல கண்டபாடியம், பரிமேலழகருரை, சிவஞானபோதம் சிவஞானசித்தி, மரபட்டவணை முதலியவற்றுள், கண்டவும் பிறவுமாம். "எழுத்துப்போலியும் எழுத்தெனவாளுவர்" என்றவாறே எனதிவ்வசனப் போலியையும், கேள்வியான்மைந் தோர்கைக் கொள்வரென்பதுபற்றி, எழுதுதற்கிசைந்தேன்.

முற்றிற்று.

௨

கணபதிதுணை

செப்பறை மான்மியம்.

திருச்சிற்றம்பலம்.

கடவுள்வாழ்த்து.

காப்பு.

ஆனந்த நிருத்தஞ் செய்யு மழகிய கூத்தன் வைகும்
வானந்தம் பரவு சீர்த்திச் செப்பறை மான்மியத்தை
யூனந்தீர் வசன மாகத் தென்சொலி னுரைத்திடற்கு
ஞானந்த வுருவா மியானைத் திருப்பத நளின முள்வாம்.

சுந்தரதாண்டவர்.

கந்தர நிறத்தன் கலைமகள் காந்தன் முதலினர் கை குவித்தேத்த, மந்தர நிகர்க்குந் தனச்சிவ காம வல்லிநன் மகிழ்வொடுநோக்க, வந்தர வுரகப் புலியுரு முனிவ ரன்பொடுந் துதிப்பச்செப் பறையுட், சுந்தர மமைந்த தாண்டவம்புரியுஞ் சோதிதன் றுணைப்பதந் தொழுவாம் (௧)

சிவகாமவல்லி,

வேயாகுந் தடந்தோழுங் கோகனகத் திருமுகமும் விளங்கு கஞ்சச், சேயாகும் பதமலருங் கொண்டடியார் செனன நோய்தீர்க்கும் வண்ண, மோயாத கவலைபளாய்த் தனுகரண போகமெலா முதவுவித்துத், தாயாகி யருள் புரியுஞ் சிவகாமவல்லிநற்று டலைமேற் கொள்வாம். (௨)

நெல்வேலி நாதர்.

குணவரபூ டணன் மனுநூல் கோடாத கோல்செலுத்திக் குவலயத்துட், டணவரிய சிவபத்தி தன்னினிலையில்

KOVILOORE ... ALAYAM.

லையெனத் தக்கோ னுன, மணவைமா நகர்முழுதுங் கண்ட வழு திக்காச்செப் பறைக்கண் வந்த, பணவரவ கங்கணத்த னெல்வேலி நாதனடி பணிந்து வாழ்வாம். (௩)

காந்திமதியம்மை

தெண்மணி மூரல் கொவ்வையஞ் செவ்வாய் சிந்துரங் தன மென வாய்த்து, விண்மணி யனைய கண்டிகை புனைந்து மேகலை சிலம்புறுங் தெய்வப், பெண்மணி பிறங்குஞ் செப் பறை நெல்லை நாயகப் பிஞ்ஞகன் றனக்குக், கண்மணி காந்தி மதியம்மை சரணங் கருத்தினு ளிருத்தியாங் தொழு வாம். (௪)

அக்கினீசுரர்.

செக்கர்வான் சடிலன் றன்னரு ளுருவைத் தீவிர வன் புடையவர்க்குக், கைக்குளார் நெல்லிக் கனியெனக் காட்டுங் கண்ணுதல் பெண்ணொரு கூறன், விக்கினங் தவிர்க்குஞ் செம்மலைப் பயந்த விண்ணவ னிராசையம் பதியு, ளக்கினீ சுரன் பொற் பாதபங் கயங்க ளகத்தினு ளிருத்தியாம் பணி வாம். (௫)

அகிலாண்டநாயகி.

மழைபுரை குழலும் வதனபங் கயமும் வல்லியை மா னுமெல் லிடையு, முழைபொரும் விழியுங் தளவிள நகையு முயர்தனக் கலசமுங் தரித்த, குழைமொழி ராசை வளரகி லாண்ட நாயகி கழலிணை சிரமேல், விழைதரு மிழையாய்ப் புனைந்தியாம் பிறப்புள் வீழ்ந்திடு மெலிவு தீர்ந்திடுவாம்(௬)

செல்வவிநாயகர்.

தந்தா வளத்தின் முகத்தானைத் தடக்கைதனிற்கோ டெடுத்தானை, யிந்தார் முகத்தார் சித்திபுத்தி யிருபாகத் தும் முடையானை, யந்தா ரகத்தின் வடிவானை யடியா ரிதய

கமலத்துள், வந்தாரன்பி னுருவானைச் செல்வப் பதியை வணங்கிடுவாம். (௭)

சுப்பிரமணியர்.

குயிலு மெழிலார் பஞ்ஞைகளுங் குலாவித் தம்முட் கூத்தாடிப், பயிலுங் குறிஞ்சிக் கிறையவனை வலாரி மகட்குப் பதிதன்னை, யயில்வேல் கரத்து த்தரித்தவனை பழகார் வள்ளி காதலனை, மயில்வா கனத்துப் பிள்ளைதனை வணங்கி மதித்து வாழ்த்திடுவாம். (௮)

நந்திபெருமான்.

சீலக் கயிலைச் சிலம்பதனிற் சிவபி ரானற் பதகமலஞ் சாலக் காண்டல் வேண்டுமென வொருவர்க் கொருவர் தாமுந்தி, யேலக் கடிது செலு நெருக்கா ரெல்லோர் தமையும் விலக்கிடுவான், கோலக் கையிற் பிரம்பு கொள்வோன் குருத்தாட் கமல மலர்போற்றி. (௯)

சைவசமயாசாரியர்.

மயிலைத் தலத்து ளென்பினைப்பெண் ணாக்கும் வள்ளல் பதம்போற்றி, கயிலைக் கிறையஞ் செழுத்தானீர் கல்லாற் கடந்தோன் கழல் போற்றி, சயிலத் திறைவன் மகள் கொழுநன் றனைத்தூ திட்டோன் றாள்போற்றி, வெயிலைப் புடைசூழ் பெருந்துறைக்க ணிறைதாள் பெற்றோ னடி போற்றி. (௰)

சந்தானாசாரியார்.

சிவஞான போதநூல் செய்த பிரான் பதம் போற்றி
சிவஞான சித்தியருள் செய்த நந்தி கழல்போற்றி
சிவஞான சம்பந்தர் செய்ய திரு வடி போற்றி
சிவஞானப் பிரகாசஞ் செய்த சிவன் றாள்போற்றி. (௧௧)

நூற்பயன்.

சிற்பரன் மன்றுட் கூத்துவந் தருளுந் திவ்விய க்ஷேத்திரமான, அற்புதமிகுமிச் செப்பறைச் சரித மன்பொடும் வாசிப்போர் கேட்போர், புற்புயக் கொங்கை யுமையொரு பாகப் புண்ணியன்றன் னருளுருவாம், பொற்பதநீழலுறை குவ ருண்மை புகன்றன் மையமொன் றிலேயே. (௧௨)

முதலாவது

புராணவாலாறுரைத்த வத்தியாயம்:—

தவஞ்செய்தகோடற்குத்தகுதியாய, எல்லாவாழ்வுகளும் நிறைந்தோங்கிய நைமிசவனத்துள், சௌனகன் முதலிய முனிகணங்கள், சத்திரவேள்விசெய்து முடித்தஞான்று, திருமாலினோர் கூறுய வியாசமா முனிவனது, முதன் மாணாக்கனுயுள்ள வனூஉம் புராணங்களது இரகசியமாய மெய்ப்பொருளை நன்குணர்ந்துடையவனூஉம், மேம்பாடுடையவனூஉம், தவ விசேடமுடையவனூஉமாய சூதமாமுனிவன்; ஆண்டெழுந்தருளினன். சிவாநுபூதிச்செல்வனுய, அம்மாமுனிவன்வருமாற்றைக்காணப் பெற்று, ஆனந்தக் கடலுளழுந்தி, அந்நைமிசவனத்துள் வைகுமுனிகணங்கள், எதிர்கோடற்குறிய முறையானே எதிர்கொண்டு அழைத்துக்கொடுபோந்து, தகுதியுடைத்தாய-ஆசனத்தின் கண், எழுந்தருளியிருக்குமாறு செய்து அருக்கியமுதலிய உபசாரங்களெல்லாஞ்செய்து, பலவேறுவகைப்பட்ட தோத்திரஞ் செய்துவணங்கி, மிக்கதாழ்மையோடு முன்வருமாறு வேண்டுதல் செய்கின்றனர்: புண்ணியப்பொருளை-ஒருவடிவெடுத்தா லொத்துவிளங்கும், முனிவர்பெருமானே! சருவலோகை கநாயகனுப பரமசிவனது திப்பியமாய சரிதாமிர்தங்களை, நாமெல்லாம்-செவிவாயா

னே பருகுதல் செய்து, மூவகைத்துன்பமாய தாகந்தணிந்து, திருத்தி யெய்தப்பெற்றும். காளகண்ட வடிவுடையனாய பரமசிவன், திருக்குற்றுலத்துள், எழுந்தருளியிருந்து அகத்திய முனிவனுக்குச்-சிவத்தல மான்மியங்களைத் திருவாய் மலர்ந்தருளிய ஞான்று, அவை தமமுடன்வைத்துக் கூறி யருளியதாய், தனக்கு-ஒப்புயர்வில்லாத செப்பறை மான்மியத்தினை, அடியேங்களுய்யுமாறு கருணை கூர்ந்து, திருவாய்மலர்ந்தருளுக-எனத்தெரிவித்தனர். தவப்பொருளுடையராய்-அந்நைமிசவனத்து முனிகணங்களது, வேண்டுட்கோட்கிரங்கியருளி, சிவனடியார்க்கெல்லாம் முடிமணியாய அச்சூதமாமுனிவனும், பேரின்பக்கடலுண் மூழ்கி, அன்பர்மாட்டவாவுடைய வனூஉம், பரமகருணாநிதியுமாய பரமசிவனது திருவடித்தாமரையையும், பிரமநிலைதலைப்பட்ட தன்னாசிரியனது திருவடித்தாமரையையும், சிந்தித்து வணங்கிதற்போதமின்றிஅருட்போதமுடையவனுய்க் கூறுவான் ருெடங்கினன்.

சௌனகன் முதலிய முனிகணங்களே! முன்னொருஞான்று, வாமதேவ முனிவன் மாயோனுலகினைத் தலைப்பட்டு, இலக்குமிதேவியோ டெழுந்தருளியிருக்கும், திருமாலினை வணங்கி, அனந்தமெண்ணத் தனவாயதோத்திரஞ் செய்து நிற்புழி, அத்திருமால் அவனைநோக்கி, வாமதேவ முனிவனே! நினதிச்சை என்னை? எனக்கடாவியருள, அவனும் கபிலன் முதலிய முனிகணங்களானுங் காண்டற்கரிய நினது திப்பியதரிசனத்தினும் விசேடித்தது பிறிதொன்றின்மையின், நினதுபாததாமரையின் கண்ணும், பரமசிவனது பாத தாமரையின் கண்ணும் எஞ்ஞான்றுமிடையறுது வைக்கும் அன்பினையே பெறுவான் இச்சிக்கின்றனன். அதனை அருளுகவென வேண்டிக்கொள்ள

அவனும் நீ வேண்டியாங்கே, முன்னையதாய வரத்தினைத் தந்தருளினோம், பின்னையதாய வரத்தினை எய்திக்கோடற்கிச்சையுடையையேல், சிஞ்சாவனத்துட் போந்து, ஆண்டுளதாய காமதேனு தீர்த்தத்துளாடி, ஆண்டெழுந்தருளியிருக்கும் கைலாயநாதனை, அருச்சித்து வணங்குக வணங்குவையாயின் அஃதெய்துமெனக் கூறினன்; அல்லதூஉம் கந்தபுராணத்து உபரிபாகத்துளதாய தான வைபவகண்டத்துள்ளவாறே, அத்தலமான்மியத்தினை அவன் அவனுக்குக் கூறலுற்றுழி, அதன் ௬-அ-௬-௰௩ ஆய அத்தியாயங்களுள் நீவிர் வினவிய செப்பறைமான்மியத்தினையும் கூறுதல் செய்தனன். அதனை என்னுற்றெறிந்த துணையுங்கூறுவல்; ஒருங்கிய மனமுடையராய்க் கேண்மினெனக் கூறுவான்றொடங்கினன்.

முதலாவது புராணவரலாறுரைத்த வத்தியாய முற்றியது.

2-வது தலம், தீர்த்தம் மூர்த்தி மான்மியங்கள் உரைத்த அத்தியாயம்:—

தலமான்மியம்.

திருநெல்வேலியினுக்கு ஈசான திசைக்கண், பொருனை மாநதியினுக்கு உத்தரஞாங்கரினுள்ளனவூஉம், யாண்டும் யாவர்க்கும் புலனுமாறுமிக்கு நிகழ்வனவூஉம், அங்கிப்புத்தேள் தங்கி அருச்சித்தனவூஉமாய சிவத்தலங்கள் இரண்டுள்ளன. அவை தம்முள் அந்நதிதீரத்தது அன்மைக்கண் உளதாய வொன்றனுள், அங்கிசெய்த பூசைக்குமகிழ்வுற்று பகவானுய பரமசிவன், மேம்பட்ட அழகிய கூத்தினைக்காட்டியருளினனென, திருமால் கூறக்கேட்ட வாமதேவ முனி

வனும், பகவானே! தாமரைக்கண்ணனே! அன்பர்க்கு அருள் செய்தற்கண் பேரவாவுடையவனே! நடேசபிரான் அவ்வங்கிப்புத்தேட்கு, அவ்வழகிய கூத்தினைக் காட்டியருள்தற்கு ஏதுவென்னை? அஃது நிகழ்ந்தது எந்தஞான்று? கேட்டற்கண் அவாமிக்குடையவனூஉம், நின்மாட்டு அன்புடையவனூஉமாய அடியேற்கு, அவ்விரண்டனையும், அவ்விருவேறு வகைப்பட்ட தலமான்மியத்தினையும், கருணையானே கூறியருளுகவென வேண்டிக்கொள்ள, அவனும் அவனை நோக்கி, முனிவனே! அதனை முன்வருமாறு கூறுவல் கேட்டல் செய்கவெனக் கூறுவான் றொடங்கினன்.

எல்லாத்தலங்களினும் மேம்பட்டதெனக் கருதி பரமசிவன் எஞ்ஞான்று மெழுந்தருளியிருக்கப் பெற்றதூஉம், ஆதிகிருதயுகத்தின்கண் உளதாயதூஉம், நடேசபிரானுக்குப் பேரவாச்செய்வதூஉம், உயிர்கட்குத் தரிசனமாத்திரையானே, இருமை யின்பங்களையும் பயப்பதூஉம் நெடுஞ் சேணினின்னைப்பினும் சிவபுண்ணியம் வழங்கற்பாலதூஉம், தன் மாட்டு அன்புடன் எஞ்ஞான்றும் வைகுவோரை, பிறவிப்பெருங் கடனீந்தச்செய்து, முற்றிக்கரையேற்றுவதோர் புணையினை யொப்பதூஉம், அஞ்ஞானத்தினை ஓட்டி, மெய்ஞ்ஞானத்தினைக் காட்டுமாற்றானே, இருளையோட்டி ஒளியைக்காட்டு ஞாயிற்றினை யொப்பதூஉம், சிவபிரானது திருவாக்கானே இரகசியங்களுள் வைத்து இரகசியமென வருளப்பெற்றதூஉம், தன்னை இஉள்ளவாறுணர்ந்தபெரியோர்களானும், சித்தர்களானும், யோகிகளானும், விருப்பிவைக்கப் பெற்றதூஉம், நிறைந்த வாழ்வெல்லாமமையப்பெற்றதூஉம், விசுவேசர், விசாலாட்சி, அன்னபூரணி இவர் வைகுதலபற்றி, தென்காசியெனப்படுவதூஉம், வெள்ளிமலை யுண்மை பற்றி, தென்கைலையெனப் படுவதூ

டும், செப்பறையம்பல முன்மையின் தென் சிதம்பரமெனப்படுவதூஉம், அய்யனுன் இடையருது எஞ்ஞான்றுங் காக்கப் பெற்றுடையதூஉமாய, திப்பியமாய அச்செப்பறைத்தலத்தினுக்கு, ஒப்பதென வைத்துச் செப்புதற்கு பிறவாய தலங்களும் உளவாமோ! ஆகாவாம்.

நவமணிகளுள் வைத்து வயிரமணியூஉம் பசுக்களுள் வைத்துத் தெய்வப்பசுவூஉம், மந்திரங்களுள் வைத்துத் திருவைந்தெழுத்தூஉம், மரங்களுள் வைத்து கற்பகமரமூஉம், தேவருள் வைத்து மகாதேவனூஉ மேம்பட்டு விளங்குமாறுபோல, தலங்களுள் வைத்து அச்செப்பறைத் தலமும் மேம்பட்டுளதேயாம். இங்ஙனமாகலின் அதனுள் வேள்வி செபந்தப முதலியன, நடேச பிரானைச் சுட்டி ஒருவன் செயப்பெறுமாயின், அவனுக்கு அவை ஒவ்வொன்றும், தனித்தனியே அளவிறந்தனவாய்ப் பெருகி தத்தம் பயனை யீதலொருதலை, திருவாதிரைமுதலிய விசேட நாண் மீன்களில் ஒருவன் ஆண்டு வசிக்கப்பெறுமாயின் அவன் பெறும்பேறு இத்துணைத்தெனக் கூறவல்லுநரியாவர்? இங்ஙனம் விரும்பி வசித்தலன்றி, விரும்பாது ஒரு முயற்சியினைச்சுட்டியாதல் வேற்றூர்க்குச்செல்லும் மார்க்கமத்தியினுதல் ஒருவன் ஆண்டெய்தி ஒரு தினம் வசிக்கப்பெறுமாயின், அவன்றன் எண்ணிறந்தபிறப்புக்களில் முன் செய்துகொண்டபாவங்களனைத்தும்ஒருவப்பெறும்ஒருவன் காய்ந்த இலையினை நுகர்ந்து நீண்ட நாட்டுணையும் துன்புற்றுச் செய்த தவத்தாலாய பயனெல்லாம், ஆண்டு அன்புடனோர்க்குந் திருவாதிரை நோன்பொன்றே, ஈதலொருதலையாம். ஆண்டுச்சேறற்கு ஆற்றலினுலொருவன், சேய்மைக்கண் உளனுயாதல், அதன் மான்மியகதினை வினவப்பெறு

மாயின், அவன் எல்லாச்செல்வங்களு மெய்தலொரு தலையாம்.

சிவனடியார்க்கு அன்னதானமுதலியனவூஉம், தேவாலயம், மடாலயமுதலிய திருப்பணிகளுஉம், ஒருவன் ஆண்டுச் செயப் பெறுமாயின், அவன் மனதின்கண் இச்சித்த போகமெல்லா மெய்தப்பெற்று, இறந்த பின்னர்க்கைலையங்கிரியைத் தலைப்பட்டு, சிவகணங்கட் கெல்லாம் இறைவனுகும்.

தீர்த்த மான்மியம்

மலையரசன் மகளாய முதல்வியது திருக்கரத்திற் ரோன்றிய பொருனை மாநதியினும், மேம்பட்டதென வைத்து ஓதற்பாலதாகுநதி, யாது மின்றுமென வேதாகமங்கள் கூறுகின்றன. எல்லாநதிகளும், கிருதயுக முதலிய நான்கு யுகத்தினும் ஒரோவொன்றே மேம்பாடுடைத்தாகி தம்மை வந்தெய்தப்பெறுவோ ரொருவனுக்கு இச்சித்தபலன் களீவனவாகும். இப்பொருனை மாநதியோ, அங்ஙனமின்றி, தன்னை வந்தெய்தி னோரை நான்குயுகங்களினும் ஓரியல்பாயே மும்மல அழுக்கினைக்கழுவி தூய்மை செயற்பாற்றும். இங்ஙனமாகலின், அதனை ஒப்பதெனவைத்து எனையநதிகளைக் கூறவல்லு நரியாவர்?

வேள்வி முதலியன வேட்டு தேவர் பதவியினைத் தலைக் கூடப்பெற்று, துன்பமெல்லாம் ஒருவிய முற்றவிசேட முடையாரோ பொருனைமாநதி தீரத்துள் தோன்றும் பேறுடையராவர்; ஏனோர்க்கு ஆண்டுத்தோன்றும் பேறுளதாகாது. அங்ஙனந்தோன்றி யுளரானோர், இந்திரன் முதலிய இறைவரானு மெய்தற்கரிய, அந்த மிலிமின்பத்ததாய சிவலோகத்தினைத் தலைக்கூடப்பெறுவர்.

மார்கழித்திங்களினும், ஐப்பசித்திங்களினும், மாசித்திங்களினும், ஒருவன் நாடோறும் முக்காலங்களினு நீராடி, தனக்குரியவெனை நூல்களின் விதித்தவிதி வழுவாது, நித்திய கருமமுதலியன செய்துமுடித்து, நடேசபிரானை வலம் வந்து தரிசிக்கப்பெறுமாயின், அவன் தேவருலகத்தினை யெய்தி அரசாண்டு, பின்னர் மேம்பட்ட பதங்களையுந் தலைப்படும். அம்மாநதிக்கண் எட்டுணைத்தாயபொன்னேனும், ஒருவன் சிவனடியார் கையிற்றானஞ் செயப்பெறுமாயின்; அஃது மலைத்துணைத்தாய் வளரப்பெற்று, தவஞானங்கள் மேன்மேற் பெருகுதலானே, அவன் வீட்டுநெறியினைத் தலைப்படும். இதனுக்கு மேம்பட்ட பதம் யாதுளது? அந்நதியினுள் ஒருவன் ஆடல் செயப்பெறுமாயின், அவன் நூறு கறவைப்பசுக்களை, உத்தம குணமமைந்த பிராமணருக்குத் தானஞ்செய்த தனுபய பயனெய்தும். அந்நதி தீரத்தின் கண், ஒருவேள்வியினை ஒருவன் வேட்கப்பெறுமாயின், அவன் எவராலு மெய்தற்கரிய பதவியினை யெய்தும், அல்லதூஉம், அவனுக்கு முதல்வனருளானே சோகம் பாவனையுங் கைகூடப் பெறும்.

முன்னொரு ஞான்று, எழுகடற்கு மிறைவனுயவருணதேவன், நதிகள் யாவையினும் மேம்பட்டதாய நதி, யாதென ஆராய்ந்து, பொருனைமாநதியே அப்பெற்றித்தாயதென வுணர்ந்து, அந்நதி தீரத்து வேள்வி வேட்பான் கருதி, அதற்குரிய உபகரணங்களோடு வேண்டும்பொருளும், கைக்கொண்டு, ஆண்டுப்போந்து, வேள்விச்சாலையொன்றனை விதி பிறழாதமைத்து, நவமணிகளானியன்ற பீடத்தின்கண் கும்பத்தினை யெழுந்தருளப் பண்ணி, வேள்விக்குண்டத்துள் விதிவழுவாது ஓம வங்கியினை வளர்த்து,

தேவரனைவரும் வேதமந்திரமோத, பரமசிவனுக்குரித்தாய அவிப்பாகத்தினை யீந்தான். பின்னர் கன்னிகாதானம், உபநயனமுதலிய வற்றிற்கு வேண்டுந்திரவிய மீந்து, ஏனைத்தேவர்க்கும் அவிப்பாகத்தினை யீந்து, உத்தம குணமமைந்த பிராமணர்க்குப் போசன முதலியனவுஞ் செய்துமுடித்தனன். இங்ஙனம் வருணன் வேட்டவேள்வியினை நோக்கியருளி, பரமசிவன் பார்பதியைப் பாகமுடையனாய், இடபத்தின் மேல் ஆண்டுத்தோன்றியருளி, தேவர் முனிவர் புடைசூழ நின்று, காட்சி கொடுத்தருளினன். அப்பொழுது வருணதேவன் வணங்கி, பன் முறை தோத்திரஞ் செய்து நிற்புழி, அச்சிவபிரானும் அவனை நோக்கியருளி அன்பனே! நீ விரும்பிய வரத்தினைக் கேட்டுக் கொள்ளுக வென ஆணை செய்தருள, அவனும் நிரதிசயானந்தத்துட் புகுத்தியருளுகவென வேண்டிக் கொண்டனன்; அப்பிரானும் அங்ஙனந்தந்தருளினனென்று, மறைந்துபோயினன்.

இப்பெற்றித்தாய பொருளை மாநதியினது, சரிதங்களை ஒருவன் அன்புடன் கேட்கப் பெறுமாயினும், படிக்கப்பெறுமாயினும் அவன் இம்மைக்கண் எல்லாவின்பங்களு மெய்தி முடிவின் கண் வீடுபேற்றினையு மெய்தும். கன்னிகை பொருத்தி இதனை வாசிப்போர்க்கு, தன்னுனியன்ற பொருளீந்து கேட்கப்பெறுமாயின், அவள் இச்சித்த மணவாளனை யெய்தி, நடேச பிரானது திருவருளினையுமெய்தும். மலடி பொருத்தி, அங்ஙனமிதனைக் கேட்கப்பெறுமாயின், அவள் நன்மக்கட் பேறெய்தும்.

புளி, மா, தென்னை, பலா, நெல்லி, சந்தனமுதலிய மரங்கள் சூழ்ந்திலங்கும், அச்செப்பறைத் தலத்துளெழுந்தருளி யிருக்கும், சுந்தரதாண்டவமுடையான், நெல்வேலி

நாதன், இன்னோரது சந்நிதிக்குத்தென்றிசைக்கண், தாண்டவ தீர்த்தம், நீலலோகித தீர்த்தமென, தீர்த்தங்களிரண்டுளவாகும். அவை தம்முடன் பொருனை மாநதியும் போந்துதலைக்கூடி விரவுகின்றது. அச்சங்கம தீர்த்தத்துள் ஒருவன் ஆடப்பெறுமாயின், அஃது அவன் சம்சாரத்துக் கேதுவாய பிறவிப்பிணியை, மருந்தை யொத்தொழித்த லொருதலை. அல்லதூஉம் அங்ஙனம் மும்மலங்களையுங் கழுவுதல் செய்து, ஞான நெறியெய்திக் கோடற்குரிய வாயிலைவிளக்கு முகத்தானே, நடேசபிரானை எஞ்ஞான்றுஞ் சிந்தித்துத் தெளியும், உபாயத்தினையு மளித்தருளும். அல்லதூஉம். ஒருவன் அத்தீர்த்தத்துளாடி, சிவபூசை செபம், தபமுதலியன செயப்பெறுமாயின், அவன் அவற்றை ஏனைத்தலத்துட் செயதெய்தும் பயனினும், கோடிமடங்கதிகமாய பயனெய்தும். ஒருவன் அத்தீர்த்தக் கரையுள் பிதிரரை நோக்கிச் சிரார்த்தஞ் செயப்பெறுமாயின், அதனானே அப்பிதிரர் இந்தியப்பகையினை வென்று, மேம்பட்ட இன்பமெய்துதற்கேதுவாய, ஞானநெறியினைத் தலைப்படுவர். அச்சிரார்த்தத்தினை மெய்யன்போடுசெய்யுமவனும், அன்ன பயனெய்தும். நீர்மூடனாயினும், அத்தீர்த்தத்துள் ஆடப்பெறுமாயின், அவனது பாவமெல்லாம், ஞாயிற்றின் முன் அந்தகாரம்போல விரையக் கெட்டொழியும். ஒருவன் ஆண்டிறத்தல் வேண்டுமெனு நியமத்துடன் போந்து அந்நதி தீரத்துள் மரிக்கப்பெறுமாயினும், அதுபெறாது வசிக்கப் பெறுமாயினும் அவன்பிறவி யொழிதலொருதலையாம். ஒருவன் தன்னத்தி அத்தீர்த்தத்துளிடப் பெறுமாயினும் மேற்கூறிப்போந்த பயனெய்துத லொருதலையாம். சிவ பிரானுக்கும், சிவனடியார்க்கும் ஆட்டன் முதலியவற்றிற்கு ஒருவன் அத்தீர்த்தத்தைக் குடத்துள் முகந்துகொடு

போகப்பெறுமாயின். அடியொன்றற்கு அசுவமேதவேள்வி யொன்று செய்த தனுைப பயனெய்தும். ஓரறிவுயிராயினும், அத்திர்த்தத்துள் பிறந்திருக்கப்பெறுமாயின், அவை கூரிய புத்தியுடைய விசேட புருடராய்த்தோன்றி, ராஜ போகநுகரப் பெற்று, பின்னர் மேம்பட்டபதங்களை முறையானே யெய்தும். ஒருவன் அத்தீர்த்தத்தினைத் தீண்டப்பெறுமாயின், அவன் துறக்க இன்பமுதலிய இன்பமெல்லா நுகர்ந்து, முடிவின்கண் அக்கினீசுரனது திருவடி நிழலைத் தலைக்கூடப்பெறும். தைத்திங்களினெய்துவதாய பூசநாண் மீனத்தன்று, ஒருவன் அத்திர்த்தத்துளாடி ஆண்டெழுந்தருளும் நெல்வேலிநாதனையும், காந்திமதி தேவியையும் அழகியகூத்துடையானையுந் தரிசிக்கப்பெறுமாயின், அவன் கடல் சூழ்ந்த இம்மண்ணுலகத்தினை யரசாண்டு, முடிவின்கண் சாரூபபதத்தினைத் தலைக்கூடும். ஒருவன் ஆண்டு ஓராட்டத்துணையும், முக்காலங்களினு நீராடி, அழகிய கூத்துடையானை வலம் வருதல், வணங்குதன் முதலியன செய்து வசிக்கப்பெறுமாயின் அவன் நீண்ட நாட்டுணையும் காசிமா நகருள் வசித்ததனுைய பயனெய்தும்.

மூர்த்திமான்மியம்.

தென் சிதம்பரமாய அச்செப்பறைத் தலத்து னெழுந்தருளியிருக்கும், சுந்தரதாண்டவ முடையானை, ஒருவன் தரிசனஞ் செயப்பெறுமாயின், அவன் செய்த பாவமெல்லாம் ஊழிமாருதத்துட் பட்ட பூழிபோலத் தழிந்துபோதலொருதலை. அல்லதூஉம், ஒருவன் மெய்யன்போடு உதயகாலையில் தரிசனஞ்செயப் பெறுமாயின், அவன் கடல் சூழ்ந்த மண்ணுலகனைத்தையும், தானஞ்செய்த தனுைப பயனெய்தும். ஒருவன் உச்சிக்காலையில் தரிசனஞ்செயப்

பெறுமாயின், அவன் எண்ணிறந்த ஈற்றுப்பசுக்களை சிவ னடியார்க் கீந்த தனுைய பயனெய்தும். ஒருவன் சாயங்கா லையில் தரிசனஞ்செயப்பெறுமாயின், அவன் கோடியெண் ணத்தனவாய பசுக்களை, தானஞ்செய்த தனுைய பயனெய் தும். ஒருவன் அருத்தயாமத்தில் தரிசனஞ்செயப்பெறு மாயின், அவன் அசுவமேத வேள்வி செய்ததனுைய பய னெய்தும்.

அந்நடேச பிரானுக்கு ஒருவன் விமான முதலிய ஆல யப்பணி யியற்றப்பெறுபாயினும், கறவைப்பசுக்களுதவப் பெறுமாயினும், சோலையுண்டாக்கப் பெறுமாயினும் அபி டேகத் திரவியமுதலியன வழங்கப்பெறுமாயினும் சோம வாரத்தன்று வில்வம், அக்கதை அறுகு, தும்பை யிவை முதலியவற்றுனே, அருச்சனை செய்விக்கப் பெறுமாயினு ம், நந்தவனம் வைக்கப்பெறுமாயினும், மணிகளானியன் ற திருவாபரண முதலியன செய்வித்தியப் பெறுமாயினும் இன்னும் இன்னோரன்ன பணிபிறவுஞ் செயப்பெறுமாயி னும், அவனெய்தும் பயன் யித்துணைத்தென எம்மனோ ராளெடுத்துரைக்க வமையாதாம்.

ஆதிரை நாண்மீனத்தன்று, நடேசபிரானுக்குப்பேரன் புடன், ஒருவன் பால், தயிர், நெய், தேன், கருப்பஞ்சா று, பழவருக்கம், அன்னம், யிளநீரிவை முதலிய வற்று னே ஆட்டுவிக்கப்பெருமாயின், அவன் நன்மக்கட்பேறெய் தி, முடிவின் கண் சாமீபபதத்தினைத் தலைக்கூடும். அழ கிய கூத்துடையானது சந்நிதிக்கண், ஒருவன் மலர் முத லியவற்றுன் அலங்காரஞ் செயப்பெறுமாயின், அவன் சா லோகபதத்தினைத் தலைக்கூடும். அப்பிரானுக்கு ஒருவன் சந்தனத் தானாட்டுவிக்கப் பெறுமாயினும், யாட்பொடி

மஞ்சட்பொடி, நெல்லிப்பொடி யிவைமுதலிய வற்றினை ஆட்டுவிக்கப்பெறுமாயினும் அவன் செய்த பாவமெல்லா மொருவுத லொருதலையாம். ஒருவன் சந்நாபிடேகம் கும்பாபிடேகம், உருத்திராபிடேக முதலியன செய்விக்கப் பெறுமாயின், அவன் பெறும்பயன் யித்துணைத்தென எம்மனோராற் கூறவமையாததாம். அந்நடேச பிரானுக்கு ஒருவன் மெய்யன்போடு ஒரு மலரானருச்சனை செய்விக்கப்பெறுமாயின், அவன் வனைந்தலங்களுள் நூறு பொன்மலர் கொண்டு அருச்சிப்பதனைய பயனெய்தும். அப்பிரானுக்கு ஒருவன் கருப்பூர தீபத்தாராதனை செய்விக்கப்பெறுமாயின் அவன் சாருப பதத்தினை தலைப்படும். ஒருவன் திருமஞ்சன முகந்து கோடற்குக் குடமும், வாசப்புகையிட்டுக் கோடற்குத் தூபமுட்டியும், ஏற்றிக்கோடற்குத் தீபமும் அடித்துக்கோடற்கு மணியும், ஆட்டிக்கோடற்குக் கலசமும், தன்னானியன்ற துணையும் செய்தியப்பெறுமாயின், அவன் செய்துகொண்ட பாவமெல்லா மொருவி இச்சித்த யின்பமெல்லாம் எய்துத லொருதலையாம்.

திருமால், அங்கி, அகத்தியன் முதலிய அன்பர்க்கு அருள் புரிந்த அழகிய கூத்துடையாற்கு அன்னக் குவியலும், தம்முள் வேறுபட்ட அறுசுவைத்தாய கறியமுதும் பலவேறு வகைப்பட்ட பண்ணியமும், திருவாதிரை முதலிய விசேட நாண்மீன்களில், ஒருவன் நைவேதனஞ் செய்விக்கப் பெறுமாயின், அவன் அவியொன்றற்கு யுகமொன்றாக், சிவலோகத்தினைத் தலைப்பட்டுவாழும். ஐந்தொழில் வடிவாய சுந்தரதாண்டவம் புரிந்தருளும் அப்பிரானை ஒராட்டைத்துணையும், நாடோறும் காலமாறினும் வலம் வந்து வணங்கித் தோத்திரஞ்செய்து, பேரன்புடன் ஒருவன் தரிசனஞ் செயப்பெறுமாயின், அவன் மல மா

யை கன்மங்கள் மூன்று மொருவி, பிரதிசயானந்தத் துக்கேதுவாய் சாயுச்சியத்தினைத் தலைப்படும். மார்கழித்திருவாதிரையன்று சிவகாமவல்லியது மனவாலயத்து ளுறைவோனுய அழகிய கூத்துடையானை, ஒருவன் பேரன்போடு தரிசனஞ்செயப் பெறுமாயின், அவன அவ்வாண்டுமுழுதுந் தரிசனஞ்செய்த தனுய பயனெல்லா மெய்தும். ஒருவன் அப்பிரானது சந்நிதியுள் ஒரு மண்டலத்துணையும்வசித்து, சரியை முதலிய சிவபுண்ணியங்களுள் ,யியன்றதொன்று செய்து பஜனம் செயப் பெறுமாயின், அவன் யிச்சித்த போகமெல்லாம் எய்துதலொருதலை. ஒருவன் சூரியோபராகம் சந்திரோபராகம் முதலிய புண்ணியகாலங்களில், அவ்வழகிய கூத்துடையார்க்கு விசேடபூசை செய்வித்து, தரிசனஞ் செயப்பெறுமாயின் அவன் அப்பிரானது திருவடி நீழலைத்தலைக்கூடும். சிவகாமவல்லிக்கு நாயகனுய அப்பிரானது மான்மியத்தினை அவனே உணர்வதன்றி யித்துணைத்தென எம்மனோராலுணர்ந்து கோடலமையாதென, திருமால் வாமதேவ முனிவனுக்குக் கூறி எஞ்சிக்கிடந்த வினைச்சரிதத்தினை மறித்துங்கூறுவான் றொடங்கினனென சூதமாமுனிவன் நைமிசவனத்து முனிகணங்கட்குக் கூறி, மறித்தும் அங்கிப் புத்தேட்கு அழகிய கூத்துக்காட்டிய வாற்றை கூறுவான் றொடங்கினன்.

2-வது, தலம், தீர்த்தம் மூர்த்திம ன்மியங்கள் உரைத்த அத்தியாயமுற்றிற்று.

3-வது அக்கினி தேவற்கு ஆடல் காட்டிய அத்தியாயம்.

அங்கிப்புத்தேள் முதற்கிருதயுகத்தின் கண், சிஞ்சாவனத்துளெழுந்தருளியிருக்கும் கைலாய நாதனை, உபாசனைத்துமூர்த்திபாகக் கைக்கொண்டு செய்த பூசையானே, அவனது

நெற்றி நேத்திரமாம் பெறெய்தப் பெற்றனன். அவன் அஞ்ஞான்று தொட்டு நாடோறும், அத்தல நாதனை வழிபட்டு வந்துழி, மாசித்திங்களில்-சித்திராநதியுள், காமதேனு தீர்த்தத்துள் நாடோறுமாடி, மூக்காலங்களினும் விசேட அருச்சனை செய்து, அவனது சந்நிதியுள் குவித்தகையுடையனாய், திருவைந்தெழுத்தைக் கணித்துக்கொடு தவஞ் செய்தனன். அவன் அங்ஙனஞ் செய்துகொண்ட, ஜெப தப பூசைகளானே, பரமசிவன் பெரிதும் விரையக் கண்கூடாத்தோன்றி, அவனை நோக்கி யருளி அங்கியே! நீ இச்சித்த வரத்தினைக்கேட்டுக்கொள்ளுக தந்தருளுவலென ஆணை செய்ய, அவனும் சச்சிதானந்த ரூபமுடையானே! அடியேற்கு இற்றை ஞான்று, எல்லாப்பேறும் வழங்கற்பாலதாய, நினது அழகிய கூத்தினைத் தரிசனஞ் செய்து கோடற்கும், நினது அட்ட மூர்த்தத்துள் ஒரு கூற்றினை யெய்திக் கோடற்கும், இச்சிக்கின்றேனென வேண்டிக் கொண்டுழி அன்பர் மாட்டவாவுடையவனூஉம், எல்லாந் தோன்றி நின்றழிதற்கு நிலைக்களமாயவனூஉமாய, அக்கைலாய நாதனும், ஈண்டைக்கு யோசனை யொன்றருள், தென்றிக்கினுள்ள பொருனைமாநதியின் உத்தரதீரத்தின் மேம்பட்டதாய எனதழகிய கூத்தினை பிற்றை ஞான்று, நீ காணுமாறு காட்டுவல் காண்க. ஆகலான் நீ ஆண்டுப் போந்து, என்னை யருச்சனை செய்து வைகுக. அக்கூத்தினை ஈண்டுக்காட்டாது ஆண்டுக் காட்டுதற்கேதுவென்னையெனின் அத்தலம் இரகசியத்துள்ள வந்து இரகசியமானதால் எனக்கு மிகுதியும் பேரவாவானதேயாம். ஈண்டு நின்று ஒரு யோசனைத்துணையும் எனதிச்சிஞ்சாவனமுளதென்றறிக. மங்கலமுடைத்தாய அச்சிஞ்சாவனத்துள், நினதிச்சையெல்லாம் முற்றுறுமாறு செய்குவல்.

A. No. 8143
91:38
...லகம், கோவிலூர்

ஆகலின் ஆண்டு நீ விரைப்போந்து, மேற்கூறியவாறே செய்கவென ஆணை செய்து, கரந்து போயினன். இங்ஙனம் போய பின்னர் பேரியல்புடையனாய அவ்வங்கிப்புத்தேளும், பொருனைமா நதி தீரத்துள் மேற் சுட்டப்பட்ட அத்தலத்தினெய்தி, தன் பெயரானே-ஆண்டு தீர்த்தமொன்றுளதாக்கி, அதனுளாடி, பின்னர் தரிசித்தன் முதலியன செய்வார்க்கு எல்லாப்பேற்றினையும் வழங்கற்பாலதாய இலிங்கமொன்றனையும், தன் பெயரானே மேற்றிசை நோக்குமாறு விரையப் பேரன்போடு பதிட்டை செய்து, அதனுக்குத்தர ஞாங்கரின் அகிலாண்ட நாயகியையும் பேரன்போடு பதிட்டை செய்து, அவரிருவரையும் விதி பிறழாதருச்சனை செய்து, பின்னர் விரைய அப்பொருனைமாநதியினுக் கண்மைத்தாயெய்தி, அத்தீர்த்தத்துள்ளாடி, பரமசிவனை உச்சிக்காலையில் அருச்சனை செய்துகோடற்கு வாசனை யுடைத்தாய தாமரை, வெள்ளெருக்கு, தும்பை முதலிய மலர்களும், வில்வம், துளசி அறுகாய இவற்றினையுங்கொய்து கொடுபோந்து, அகம்புறந்தூயனாய் பெட்டகவாலயத்தது நாப்பணுள்ள அற்புதமாய இட்டலிங்கத்தினை அதன் வடகரையின் வைத்துப் பூசித்தனன். அப்பொழுது நிலம், நீர், வளி, வான், சந்திராதித்தர் இயமானனாய எழுவரும் தந்தம்வடிவுடையராய், பெட்டகவாலயத்தினண்மைக் கண் எய்தி, அவன் தவப்பயனெய்துவதாய அவ்விடத்தினைச் சூழ நின்றுழி, பரமசிவன் அன்னோர்க்கும் அந்நடனங் காட்டியருளுவான் திருவுளங் கொண்டு, அப்பெட்டகவாலயத்துள் வீற்றிருந்தருளும் இலிங்கத்தினின்றும் உடுக்கை அங்கிகளிரண்டுந் தாங்கிய திருக்கைக ளிரண்டுடையனூஉம், வலக்காலை நிலக்கணூன்றி சிவந்த இடக்காலை கீழ்நோக்கவானின்கணீட்டி, அ

த்திருவடிமேல் வரதமாய இடத்திருக்கரத்தினை வைத்
துடையனூஉம், அஞ்சினோர்க்கு அபயங்கொடுக்குங்கர
மொன்றுடையனூஉமாய, இங்ஙனம் ஆண்டுத் தோன்றி
யருளி அவர் அந்நடத்தினைத் தரிசனஞ் செய்துகொள்
வான் ஆணை செய்தருளினான். அவ்வங்கி முதலிய தேவ
ரெண்மரும் திப்பியமாய அற்புத ஆனந்த மீயும் அவ்வழ
கிய கூத்தினைத் தரிசித்து தோத்திரஞ் செய்து அஞ்
ஞான்று தொட்டு அவர் வேண்டிக்கொண்டவாறே அட்ட
மூர்த்த இயல்பெய்தினரெனக் கூற, அது கேட்ட சௌ
னகன் முதலிய முனிகணங்கள், சூதமாமுனிவனை நோக்கி
கேட்டற்கண் இச்சைமீதூர்கின்ற எமக்கு நடேசபிரானுக்
கும் கேட்டற்கு இச்சையை விளைவிக்கற் பாலதூஉம்
தன்னை ஓதினோர்க்குச் சாரூப்பிய பதத்தினை யெய்திக்கோ
டற்கேதுவாயதூஉமாய அத்தோத்திரத்தினை கருணைபோ
டும் கூறியருளுகவென வேண்டிக்கொள்ள, அவனும் அவ
ரை நோக்கி முனிகணங்களே! இரகசியங்களுள் வைத்து
இரகசியமாயதூஉம், பேரியல்புடையதூஉம், அங்கி முத
லிய தேவரானருளிச் செய்யப்பட்டதூஉம், மேம்பட்ட
வற்றுள் வைத்து மேம்பட்டதூஉம், எல்லாச் செல்வங்க
ளும் வழங்கற்பாலதூஉமாய அத்தோத்திரத்தினை நுமக்கு
க்கூறுவல் கேட்டுக்கொள்ளுக.

அன்பர் மாட்டவாவுடையனூஉம், முன்னைப்பழம்பொரு
ட்குமுன்னைப்பழம்பொருளாயவனூஉம், நெற்றி நேத்திரமு
டையனூஉம், பிரமனால்பூசிக்கப்பட்டவனூஉம், பராசத்தியி
னுக்குப்பதிப்பொருளாயவனூஉம், எல்லாமங்கலமும் இயற்
கையானிறைந்துடையனூஉம், அழகியகூத்துடையனூஉமா
யினனக்கு வணக்ககம் வணக்கம். இரதிதேவியது மனோதுன்

பத்தினையொழித்தருளியவனு உம், இலக்குமிநாதனுய திருமாலானே விரும்பப்பட்டவனு உம், அரசர்க்கரசரெல்லாம் இச்சித்தற்கேதுவாயவனு உம், அழகிய கூத்துடையவனு உமாய நினக்கு வணக்கம் வணக்கம். தத்துவங்களின் பொருள்வடிவாயவனு உம், சதாசிவவடிவமுடையனு உம், எஞ்ஞான்று முளதாய சான்று ரூபமுடையனு உம், எல்லாத்தேவரினும் மேம்பட்டவனு உம், அன்றி அவரினு மிக்க ஆற்றலுடையனு உம், சிவகாமவல்லிபாக முடையனு உம், அழகிய கூத்துடையனு உமாய நினக்கு வணக்கம் வணக்கம். சிவகாமவல்லியைப்பாகம்வைத்துடையனு உம், எஞ்ஞான்றும் தன்னை யெய்தி வணங்கும் தேவர் முனிவர்மனுடர்க்கு வேண்டிய வேண்டியாங்கீபவனு உம், நடனஞ் செய்தற்கண் தலைமையுடையவனு உம், அழகிய கூத்துடையனு உமாய நினக்கு வணக்கம் வணக்கம். வேள்வி வடிவுடையனு உம், அவ்வேள்வி செய்யும் வினை முதல்வர்மாட் டவாவுடையவனு உம், யோகவடிவுடையவனு உம், அவ் யோகிகளானே அருச்சிக்கப்பட்டவனு உம், நாதவடிவுடையனு உம், நாரத முனியானருச்சிக்கப்பட்டவனு உம், அழகிய கூத்துடையனு உமாய நினக்கு வணக்கம் வணக்கம். எத்தேவனது பாதத்தினை வணங்கி பிரமன் முதலிய தேவரும் சித்தர் முதலியவரும் தத்தம் பதவாழ்வுகளை எய்தினர் அவ்வாழ்வுகளெல்லாம் ஒருங்குடையனு உம், அழகிய கூத்துடையனு உமாய நினக்கு வணக்கம் வணக்கம். மாணிக்க மணி போன்று பிரியஞ் செய்வதாய கதிர்த்தொகுதி தங்கும் பாத தாமரையுடையவனு உம், கோடியிளஞாயிற்றின் காந்தியினையொப்பவனு உம், அழகிய கூத்துடையனு உமாய நினக்கு வணக்கம் வணக்கம். நமசிவாய வென்னு மந்திரத்தைத்,

தினம் ஒரு முறை ஜெபஞ்செய்வோர்க்கு ஆனந்தத்தை யீப வனூஉம், திருமாலாய சத்தியையுடையவனூஉம், கண்மூன் றுடையவனூஉம், முப்புரத்துக்குக்கூற்றாய வனூஉம், அழ கியகூத்துடைய வனூஉமாய நினக்கு வணக்கம் வணக்கம்.

என, இங்ஙனமாக அழகிய கூத்துடையானை மறித்து மறித்தும் பன்முறை வணங்கி தலையின் கண் கூப்பிவைத்த கையையுடையராய், அங்கி முதலிய தேவரனைவரும், அப் பெருமானது சந்நிதிக்கணின்றனர். இத்துதியினைக் கேட் டருளி மகிழ்வுற்று, சிவகாமவல்லியது மனவாலயத்துளனாய அப்பிரானும் காணப்பெற்றாரது மனசின் கண் இச்சையை விளைவிக்கும் கிருபாநோக்கத்தானே, அவர் தம்மைப் பார்த் தருளி தவவொழுக்கங்களானே சிறப்புற்றோங்கி யுள்ளோ ரேயான் நமதுமனசின் கண் எழுமிச்சை யிதுவென வறிந் தனன். அல்லதூஉம், நீவிர் செய்த தோத்திரத்தினையுங் கேட்டு மகிழ்வுற்றனன். நம்மானிச்சிக்கப்பட்ட எனது கூறு, நுமக்களித்தருளப் பட்டதென இங்ஙனம் அருள் புரிந்து, அவனொண் மருஞ்சூழச்சபையினு ளெழுந்தருளி எண்ணிறந்த காலம் அழகிய கூத்தாடியருளினன். பின் னர் தவமுடையனாய அகத்தியன் முதலிய முனிவர்க்கும், திருமான் முதலிய தேவர்க்கும், நம்மனோர்க்கும், அவ்வழ கிய கூத்தினைத் தரிசனஞ்செய்வித்து, இன்பமீந்தருளினா னெனச் சூதமாமுனிவன் கூறி, அகத்திய முனிவனுக்கு அழகிய கூத்துக்காட்டி யருளிய சரிதத்தினை கூறுவான்றொ டங்கினன்.

௩-வது அக்கினிதேவனுக்கு அழகிய கூத்துக்காட்டியவா றுரைத்த அத்தியாயமுற்றியது.

4-வது அகத்திய முனிவற்கா டல்காட்டிய உக

அத்தியாயம்.

திருக்கைலாய மலையின்கண் எழுந்தருளியிருக்கும் சிவபிரான், முதல்வியைத் திருமணம்புரியும் பொருட்டு, இமயமலையைப் போயெய்தியஞான்று, திருமால்பிரமன் இந்திரன் முதலிய தேவரனைவரும், அத்திருமணக் கோலத்தினைக்காணவேண்டி, ஆண்டுச்சென்றனர். அஞ்ஞான்று, பூமியினது தென்றிசை யுயர்ந்தமைபற்றி, அத்தேவர் முனிவரனைவரும், துன்புற்று, அச்சிவபிரானை வேண்டிக்கொள்ள அவனும் அவருறுந் துன்பத்தினுக்கிரங்கியருளி, இப்பொழுது என்னையொப்பவனாய அகத்திய முனிவனை, தென்றிசைக்கண் போகச்செய்யினன்றி, இதனையொழித்துக்கொள்ளுமுபாயம் பிறிதின்றனவுணர்ந்து, அம்முனிவனைக்கூவி, அத்தென்றிசை வாய்ப்போகக் கடவையென ஆணைசெய்தருள, அவனுக்கு திருமணக்கோலங் தரிசியாது போதற்கு இங்ஙனந் தலைப்பட்டதேயென்னுந் துன்பம், மனதின் கணிகழுமாற்றையுணர்ந்தருளி, அவனைப்பார்த்து முனிவனே! பொதியமாமலைக்கண் இத்திருமணக்கோலத்தினை உனக்கு யான்காட்டுவல்; ஆண்டுக்காண்கவென ஆணைசெய்தருள, அவனும் அதனுக்குடம்பட்டு, தென்றிசைநோக்கிச் சேறலுற்றுழி, மார்க்கமத்தியினுள தாய சிவத்தலங்கள் எல்லாவற்றினையுந்தரிசனஞ்செய்துகொண்டு, வில்வலன்வாதாவியென்னும் அசுரரைமாய்த்து, பின்னர்விந்தகிரியினையுமடக்கியதன்பின்னர் தான்கொடுபோந்த கமண்டலத்தினை பூமியின்கண் வைத்துவிட்டு, அவ்வதையானுண்டாய பிரமகத்தியினைப்போக்குதற்கு, சிவார்ச்சனை செய்யலுற்றுழி, சீகாழியின்மாட்டு, இந்திரன் நந்தனவனத்துக்கு நீர்வேண்டி,

தவஞ்செய்து வேண்டிக்கொள்ள, அவன் வேண்டுகோளின் பொருட்டு, காக்கை வடிவங் கொடுபோந்து, அக்கமண்டலத்தினைக் கவிழ்த்தருளி, இந்திரனெண்ணியவாறே, அந்நதியினை ஆண்டுய்த்தருளிய விநாயகப்பிரானைவணங்கி, அருள்பெற்று, ஆண்டுநீங்கி, சிதம்பரம், திருவாலவாய் முதலிய தலமெங்கும்போய் வணங்கி, நீங்கி, திருக்குற்றாலத்தினைத் தலைப்பட்டு, ஆண்டுள்ள திருமாலினை சிவலிங்கமாத்திரியச் செய்து, பின்னர் விதிபிறழாதருச்சித்து, சிவத்தலமான்மியங்களைத் தெரித்தருளுவான் வேண்டிக்கொண்ட அவனுக்கு, அச்சிவபிரானும் அங்ஙனந்தோன்றி, யவற்றினை அருளிச்செய்ய, அதுகேட்ட பின்னர், பொதியமலையின்கட்போந்து வசித்தனன். அங்ஙனம் வசிக்குஞான்று, சிவபிரான் மேற்கூறியவாறே, அவனுக்குத் திருமணக்கோலங்காட்டி, அதனைத் தரிசனஞ்செய்யுமாறுணை செய்தருளினன். அவனும் தரிசித்துப் பன்முறை தோத்திரஞ்செய்து வணங்கி வேண்டும் வரங்கள் பெற்று ஆண்டுவீற்றிருக்குஞான்று சிவபிரான் திருக்குற்றாலத்து தனக்குச் சிவத்தலமான்மியங்களைக் கூறலுற்றுழி, அவை தம்முடன் ஒன்றுவைத்துக் கூற, தான் கேட்டதாய அச்செப்பறைத் தலத்துள் அழகியகூத்தினைச்சிந்தித்து, லோபாமுத்திரையுமுடன்போதர, முனிகணங்களோடு அம்மலையை நீங்கி, ஆண்டுப் போந்தருளி, பொருனைமா நதியுளாடி, நியதிமுடித்து. பின்னர்ச் சபையினைத்தலைப்பட்டு, நடேசபிரானை வணங்கி, அடியேங்கட்கு அழகிய கூத்தினைக்காட்டியருளுகவென வேண்டிக் கொள்ள, அவனும் அங்ஙனமாகவென்றருளி, தேவதுந்துபி முதலிய வாத்தியங்களெல்லா முழங்க, கருங்கன் மனசினையுங் கரைந்துருகச் செய்யும், ஆனந்தமயமாய அழகிய கூத்தினை, யவர்க்குக்காட்டி யருளினன். தவவிசேட

முடையனுய-அம்முனிவனும், அவன் மனைவியாய-லோபா முத்திரையும், ஏனைமுனிகணங்களும், இமையாநாட்டமுடையராய், அவனது-குஞ்சித பாதத்தின் கண்ணேயே மனம் வைத்து, தோத்திரப்பா மாலைசாத்தி, பரவசமுற்று, ஆனந்த அருவி பெருக, இருகடிகைத் துணையும், அன்பு வடிவமாயமர்வுற்று, இன்பமுடையராயருள்பெற்று, ஆண்டுச்சின்னுள் வசித்து-அண்மைக்கணுள்ள அங்கி பூசித்த ஏனைய தலங்களையுந் தரிசித்துக்கொண்டு நீங்கி மறித்தும்போய்ப் பொதியமாமலையைத் தலைப்பட்டனன்.

அருமைத்தாய-அவ்வழகிய கூத்தினை, மரமாயினும், விலங்காயினும், அதிபாதகமுடையனுயினும், தரிசிக்கப் பெறின், ஞான நெறியெய்தி, வீடு பேற்றைத் தலைப்படுதலொரு தலைபாம். இப்பெற்றித்தாய வாழ்வைத்தரும்-அவ்வழகிய கூத்துடையானது-பெருந்தகைமையினை, இத்துணைத்தெனவுணர்ந்து கோடல், யார்க்கும்-அரியதொன்றேயாமெனத் திருமால் கூறி, மறித்தும்-எஞ்சிக்கிடந்த-ஏனைச் சரிதங்களையும் கூறினனென, சூதமாமுனிவன்—சௌனகன் முதலிய முனிகணங்கட்குக் கூறி; மறித்தும்திருமால் முதலியோர்க்கு-அழகிய கூத்துக் காட்டிய சரிதங் கூறுவான்றொடங்கினன்.

4-வது அகத்திய முனிவனுக்கு அழகிய கூத்துக்காட்டிய வாறுரைத்த அத்தியாய முற்றியது.

5-வது திருமாலுக்காடல்காட்டிய அத்தியாயம்.

இங்ஙனம் திருமால் திருவாய் மலர்ந்தருளிய, அற்புதமாய-திப்பியச் சரிதத்தினைக் கேட்டு, வாமதேவ முனிவன்-

பேரின்பக் கடலுண் மூழ்கி, ஆண்டுப்போந்து-தரிசனஞ் செய்தல் வேண்டுமென-வேண்டிக்கொண்டான்-கொள்ள, அவனும்-அவனை நோக்கி முனிவனே! திப்பியமாய-அவ்வழகிய கூத்தினைத் தரிசித்துங் கோடற்கு, எனக்கும் இச்சைமீதூர்கின்ற தாகலின் நாமிருவரும்-ஆண்டெய்தி, தரிசனஞ்செய்து மெனக்கூறியருள, அதுகேட்ட முனிவனும் நன்று கூறினையென உடன்பட்டு, தனதிச்சையை முற்றுமாறு செய்த-திருவருளினை வியந்தனன்.

பின்னர், தேவர் முனிவர்முதலிய எல்லோருந் தோத்திரஞ்செய்து புடைசூழவும், இயங்களைந்து மொலிப்பவும், நாடக மங்கையர் நடஞ்செய்து போதவும், அம்முனிவன் விமான மேலேறிப் போதவும், தேவிமாரிருவரோடும்-கருடவாகனத்தி லிவர்ந்தருளி, அத்திருமால்-சிவபெருமானைச் சிந்தித்து, வைகுண்டத்தை நீங்கி, பிரமலோகத்தைச் சேர்ந்துழி, பிரமனெதிர்கொண்டு வணங்க, தான்-அழகிய கூத்தினைத் தரிசனஞ் செய்தற்கும் போதரு நிகழ்ச்சியினை, அவனுக்கவன் கூறிப்போந்துழி, பிரமனும் அக்கூத்தினைத் தரிசனஞ்செய்தல்வேண்டுமெனப்பேரவாக்கொண்டு, பரிசனம்-பாங்கர்ச்சூழ, கலைமகளோடு-அன்னவாகனத்தி லிவர்ந்து, உடன்போதர, திருமாலும் அவர்தம்மோடும்அவ்வுலகை நீங்கி, முறையானே-ஏனையலோகங்களையும்-எய்தி யெய்தி, ஆண்டாண்டுள்ள வரானே வணங்கப்பெற்று, அவரும்-உடன்போதர, அவ்வுலகங்களையெல்லா நீங்கி, மண்ணுலகைத்தலைக் கூடி, பின்னர்க்-கைலையங்கிரியைத் தலைப்பட்டு, நந்திதேவன் தாணை பெற்று, ஆலயத்துட் போந்து, சிவபிரானது திருவடியின் கண்-அட்டாங்க வணக்கஞ்செய்து, பேரன்போடு, பன்முறைதோத்

திரஞ் செய்து, தாங்கள் போதரு நிகழ்ச்சியினை அவர்க்குக் கூறி விடைபெற்று, அம்மலையை நீங்கி, கேதாரம், காசி திருப்பருப்பதம், கோகருணம், திருக்காளத்தி, காஞ்சி புரம், திருவாலங்காடு, அருணாசலம், விருத்தாசலம், சிதம்பரம், திருவையாறு, திருவாரூர், திருவாலவாய், திருக்குற்றாலம், திருநெல்வேலி, சிஞ்சாவனமுதலிய தலங்களைத் தரிசனஞ்செய்து நீங்கினர்.

பின்னர் சிவகாமவல்லியினது மனவாலயத்துளனாய எல்லாமங்களங்களு நிறைந்துள்ள, சுந்தரதாண்டவமுடையான், எஞ்ஞான்றும், அழகிய கூத்தாடல்பற்றித் துன்புறுவன்போலுமெனச் சிந்தித்து, சூடுளதாகரவண்ணம், வருணதேவன் கோடையென்பது சிறிதுமின்றி, எஞ்ஞான்று மழைநாளையொப்ப மழைபெய்யுமாறுசெய்தூஉம், வாயுதேவன் நன்மணநிறைந்த மந்தமாருதமாய்வீசியூஉம், பரிதியங்கடவுள் உதையகாலையையொப்ப, எஞ்ஞான்றுமிளங்கதிராய் விளங்கியூஉம், திங்களங்கடவுள் அமிர்தகிரணத்தோடு பிரகாசித்தூஉம், புளி, வில்வம், தென்னை, மா, பலாசம், பாதிரிமுதலிய மரங்கள் குளிர்ந்தநிழலைச் செய்தூஉம், இங்ஙனம் இன்னோரன்னரா லுபசரிக்கப்பெற்றுடையதூஉம், சத்தசுரத்தினதுருபமாய லயகதிபேதங்கட்கியையுமாறு சதிக்கும், சிலம்பொலியோடுகூடி, கண்டோர்க்கு ஆனந்தமீயும் அழகியகூத்தினது அமிர்த இசையினைக்கேட்டல்செய்து, புலி மான் முதலிய இயற்கை உயிரெல்லாம், தம்முள் விரவி அளவளாவி, கருணாநிதியாய பரமானந்தந்தங்குஞ் சுந்தரதாண்டவமுடையானைக், கைகுவித்தேத்துமவளம்பெற்றுடையதூஉமாய, செப்பறைத்தலத்தினை யண்மித்தபொழுது, திருமால், பிரமன், இந்திரன், இயமன், வருணன்,

வாயு, குபேரன், ஈசானனிவரும் ஏனைத்தேவரும், வாமதேவமுனிவனும், தரிசிப்பான் போதருமாற்றையுணர்ந்து, அங்கிப்புத்தேள் எதிர்கொண்டுவணங்க, அவர் பொருனைமாநதியின்கணுளதாய, தாண்டவ தீர்த்தத்துள் விதித்த முறையேயாடி, நித்தியகருமங்கள் செய்துமுடித்து, நடேசபிரான், சுந்தரதாண்டவஞ்செய்தருளுஞ் சபையினைத்தலைப்பட்டனர்.

பின்னர் ஆண்டெழுந்தருளும், நடேசபிரானைவணங்கி அழகிய கூத்துக்காட்டியருளுகவென வேண்டல்செய்ய, அப்பொழுது அத்திருமால் மத்தளமுழக்கவூஉம், பிரமன் தாளமொத்தவூஉம்: இந்திரன் துந்துபிகொட்டவூஉம், அங்கிப்புத்தேள் தீவத்தித்தாங்கவூஉம், இயமன் உடுங்கியம்பவூஉம், நிருதி எக்காளமூதவூஉம், வருணன் கொம்பூதவூஉம், வாயு சின்னம்வாசிக்கவூஉம், குபேரன் தூபமேந்தவூஉம், ஈசானன் பாங்காநிற்பவூஉம், நாரதன் யாழ்வாசிப்பவூஉம், வியாக்கிரபாதனும்பதஞ்சலிமுனிவனும் தோத்திரஞ்செய்துநிற்பவூஉம், பாணகம்பன் வாயாயிரத்தும் வலம்புரிச்சங்காயிரம் வைத்தூதவூஉம், வாணாசுரன் கைகளிரண்டாயிரங்களானுங்குடமுழாமுழக்கவூஉம், கணங்கள்எல்லாம்கீதம்பாடவூஉம், வேதமெல்லாம்தோத்திரஞ்செய்யவூஉம், நந்திபெருமான் வேத்திரத்தானே விலகச்செய்யவூஉம், எல்லாச்சராசரங்களையுமீன்றருளிய சிவகாமவல்லி திருக்கண்ணானோக்கவூஉம், அகண்டானந்த நித்தியவியாபக சுயம்பிரகாசமுடையவனூஉம், கல்லானீழற்கண் எழுந்தருளியிருந்து, சனகன்முதலிய முனிவர்நால்வர்க்கும் முப்பொருளுண்மையைச் செப்பியவனூஉம், சோமசூரியாக்கினியென்னும் நேத்திரமுடையவனூஉம், உபநிடங்களின் உச்சியின்

விளங்குமவனூஉம், அட்டமூர்த்த வடிவமுடையவனூஉம் ஐம்புலன்களையும் வென்ற அன்பர்களது இதயகமலத்துள், ஆனந்தாமிர்தமா யமர்ந்திருப்பவனூஉமாய அழகிய கூத்துடையான், வலப்பதாம்புயத்தை முயலகன்முதுகுநெளியுமாறூன்றியூஉம், இடப்பதாம்புயத்தை எடுத்துவீசியூஉம், செக்கர்வானம்போன்று விளங்கும், சடாமகுடம் கங்கை சந்திரன் முதலியவற்றோடு சேர்ந்தசையவூஉம், கரகமலத்திலேந்திய அங்கி எழுந்து சொலிப்பவூஉம், உகாந்தகாலத்திடியொலி பொத்துமுழங்கும், தமருகத்தொலியானே, உலகமெல்லாம் செவிடுபடவூஉம், அன்பரெல்லாம் இப்பதகமலத்து வந்தெய்துகவென அழைக்குமாறேப்ப, கலகல கலவென வொலிக்குஞ்சிலம்பு, செஞ்சரணாரவிந்தத்திற்கிடந்து செவிக்கினிதாயொலிப்பவூஉம், வளைத்துவீசியவாமகரமும், அச்சம்நீக்கும் அபயகரமும் தங்கிவிளங்கவூஉம், மகரகுண்டலமும் இரத்தினத்தோடுந் தம்முளியைந்துத் திருச்செவிகள் விளங்கவூஉம், பவளத்தின்கண் சிறுமுத்தம்பதித்தாலொத்து, புன்முறுவல்விளங்கவூஉம், பவளமலைக்கட்படர்ந்தபனிப்படலமொத்து, பாதந்தொட்டுக் கேசத்துணையுஞ் சாத்தியருளிய திருவெண்ணீறு விளங்கவூஉம், இமயத்தினின்றுமிழியும் அருவிபொத்து வெண்ணிறமுடைய பூணூறங்கியதிருமார்பு விளங்கவூஉம், எல்லாவுலகங்களின் கண்ணும் வைத்தகாருண்ணியமே வடிவெடுத்தாலொத்து திருக்கண்விளங்கவூஉம், அற்புத ஆநந்தத் திப்பியமாய அழகிய கூத்தாடியருளினான். திருமான்முதலியோர் அதனைத்தங்கண்களியுறுமாறு காணப்பெற்று, பிரதிசயாநந்தக் கடலுளமிழ்ந்தி, தன்வயமற்று அருள்வயமுற்று பேரன்பானே உள்ளமுருகினர்.

அங்ஙன முருகி, எல்லா உலகங்கட்கு மிறைவனூஉம்.

கால்முதலிய காரணங்கட்கெல்லாம் காரணமாய வனுமாகிய, எல்லாவற்றினையுந் தோற்றி நிற்கச்செய்பவனுமாகிய, சுந்தரதாண்டவ முடையவனுமாய நினக்கு வணக்கம் வணக்கம். இச்சித்த தற்கேது வாயபுன் முறுவலோடு கூடிய மதிபோலும் திருமுகப்பிரகாச முடையவனுமாகிய, தருமாதரும ரூபமுடையவனுமாகிய, பாசவீட்டினைச்செய்யுமவனுமாகிய, இருவினைப்பயனாய இன்ப துன்பங்களைக் கூட்டுமவனுமாகிய, யாண்டும் வியாபகமுடையவனுமாகிய, சுந்தரதாண்டவமுடைய வனுமாய நினக்கு, வணக்கம் வணக்கம். ஐந்தொழிலினையும் இயற்றுதியற்று மவனுமாகிய: உபநிடதங்களின் பொருளாயுள்ளவனுமாகிய, நானுதிகமின்றி, வினைப்பயனை நுகர்விப்பவனுமாகிய, வீடுபேற்றுக் கேதுவாயவனுமாகிய, ஞானவடிவுடைய வனுமாகிய, சுந்தரதாண்டவமுடையவனுமாய நினக்கு, வணக்கம் வணக்கம். என இங்ஙனமாக அவர் தோத்திரஞ்செய்தனர்.

அழகிய கூத்துடையானும் அதனைத் திருச்செவி சாத்தியருளி, அவரன்புக்கிரங்கி, நீவிர் விரும்பிய தென்னையென அருளிச்செய்ய, அவர் நீ எஞ்ஞான்றும் இத்தலத்துள் வீற்றிருந்தருள்வதுமாகிய, இவ்வழகிய கூத்தினைத்தரிசித்த மாத்திரையே, எவ்வுயிராயினும் பிறவி நீங்கி நினது திருவடி நீழலைத் தலைப்படுவதுமாய வரமிரண்டினையுந் தந்தருளுக வென வேண்டிக்கொள்ள, அவனும் அங்ஙனமீந்தருளினன். பின்னர் அவரெல்லாம் ஆண்டு வசித்து, கோடற்கு விரும்பி, தம்முள்வேறு வேறுயபன்ன சாலைகளமைத்து, அப்பிரானை, வணங்கி, நீண்ட நாட்டுணையும் ஆண்டு வசித்து, பின்னரதனை நீங்கி, தத்தந்தானங்களைப் பேர யெய்தினரெனச் சூதமாமுனிவன் கூறி, அம்முனி

கனங்களை நோக்கி, "அத்தலத்தினுள், அவர்தரிசித்தகூத்துமிகழ்ந்ததானத்து, நீண்டநாட்கட்குப்பின்னர்த்தாய், சிதம்பரத்தலத்தினின்றும் நடராஜவடிவபெருமான்றெழுந்தருளியது; அச்சரிதத்தினைக்கூறுவல்; கேட்டல்செய்க" வென, மறித்துமதனைக் கூறுவான்றொடங்கினன்.

ரு-வது திருமாலுக்கு அழகியகூத்துக் காட்டியவாறுரைத்த அத்தியாய முற்றியது.

சு வது முழுதுகண்டராம கனவு அத்தியாயம்.

மணவைமாநகரத்துள், நீதிகோடாது செங்கோல் செலுத்தும் முழுதுகண்டராம பாண்டியன், வேணுவனத்தெழுந்தருளியிருக்கும் நெல்வேலிநாதனது ஆலயத்தினைப் பிரபலமாகச் செய்வித்து, நாடோறும் காலைமாலைகளில் ஆண்டுப்போந்து, பொற்றாமரையுளாடி, காந்திமதியம்மை நெல்வேலிநாதன் இவர்களை, தரிசனஞ்செய்தபின்னர்த்தான் போசனஞ்செய்தலென்னும் நியமம்பூண்டனன். அங்ஙனநிகழுஞான்றின்கண், பின்னொருஞான்று, ஓர் ஏதுவானே தரிசனஞ்செய்யப்போதற்கு இடையூறொன்றெய்தியது. அஃதறிந்து, அற்றைஞான்று நீரும்பருகாது கவலுற்றுச் சயனித்திருந்தான். அப்பொழுது நெல்வேலிநாதன் அரசனது கனவின்கண் ஓர்முனிவடிவுகொடுபோந்து, "என்னைத்தரிசனஞ்செய்துகோடற்கு இருவேறுகாலங்களினும், கால்வருந்துமாறு சேறன்மீடல்களான்மெலியுநினது துன்பம், என்னாற்றாங்கிக்கோடலமையாது; ஆகலான் அஃதொழியுமாறருளுவல்; கேட்டல் செய்க; அஃதென்னையோவெனின், நின் மாளிகைக்கு முன்னர்த்தாய் நான் கோயில்கொண்டருளுவல்; ஆண்டு என்னைப்பதிட்டை செய்

து, நாடோறுந் தரிசனஞ்செய்க" வென ஆணைசெய்தனன். அவன் அதனைக்கேட்டு, பேரின்பவெள்ளத்துளமிழ்ந்தி, பிற்றைஞான்று திருநெல்வேலிக்கட்போந்து, " அடியேனது மாளிகைக்குமுன்னே, எத்திக்கின்கண் ? எவ்விடத்து ? எந்தஞான்று? நின்னைப்பதிட்டைசெய்து வணங்குவது? அஃதுஇனிதுபுலப்பட்டிலதே" யென, அவ்வேணுவனநாதனது சந்நிதிக்கணறிவித்துத் தரிசனஞ்செய்து, பின்னர் மணவைமாநகருட்போந்து, அற்றையிரவு கண்படைசெய்துழி, அந்நெல்வேலிநாதன் முன்னைவடிவோடு கனவின்கணெழுந்தருளி, "அரசனே! சிதம்பரத்தலத்தினின்றும், இரணியவருமனென்னுஞ் சக்கிரவருத்தியின் ஏவலானே, நடேசவடிவமொன்றனை, சிற்பநூலுடையானொருவன், ஈண்டுக்கொடுபோதருவான்; சுத்தசுயம்பிரகாச திப்பிய சிவானந்தமாய அவ்வடிவம், நான் முன்னொருஞான்று திருமால், அங்கி, அகத்தியன் முதலிய அன்பர்க்கு, அழகியகூத்துக்காட்டியருளியதலமாவதூஉம், பொருனைமாநதியது உத்தரஞாங்கரினுள்ளதூஉம், சத்தியகிரிச்சாரற்கண்ணதூஉம், நினது மாளிகைக்குமுன்னர்த்தாயதூஉமாய அவ்விடத்தின் எழுந்தருளும். ஆண்டைக்கண்மைத்தாய் நெல்வேலியின்கணுள்ள எனது பீடத்தினின்றும், எழுந்து எறும்புத்தொகுதிகள் போந்து, ஒரு குழிவாயினுள்ளாற் புகும்; ஆண்டு என்னையும் தேவியையும், நெல்வேலிநாதன், காந்திமதிதேவி யென்னு நாமகரணஞ்சாத்திப், பதிட்டைசெய்து, எமக்கு ஆலயமுஞ்செய்வித்து, நித்திய நைமித்திக முதலியவற்றை நடத்துக " வென ஆணைசெய்தான். பெறுதற்கரிய அவ்வாணையினை யேன்றுகொண்டு, அது வருங்காலநோக்கி வைகினனெனச் சூதமாமுனிவன்கூறி, அவ்விம்பவரலாற்றினைக்கூறுவானொடங்கினன்.

சு-வது முழுதுகண்டராமபாண்டியன் கனவுகண்டவா றுரைத்தஅத்தியாயமுற்றியது.

எ-வது விம்பவரலாறுரைத்த அத்தியாயம்.

உத்தரதேசத்தரசன் குமாரனாகிய சிங்கவருமன், தன் மாட்டு அரசஇலக்கணக் குறைபாடுண்மையின், அவ்வரசினை வெறுத்து வனத்தின்கட்சரிக்குநான்றின்கண் ஒருநான்று, நண்பகல் வெய்யில்வெம்மையால் நீர்வேட்கை யெய்திச் சோகமுற்றுழி, ஆண்டுளானொருவனைப்பார்த்து, "ஈண்டைக்கண்மைத்தாய் நீர்நிலையுளதாயிற்பார்த்து வந்துணர்த்துக" வென ஆணை செய்ய, அவனப்பொழுதேபோய் நாற்றிசையினும்பார்த்துக்கொடு மீண்டுபோந்து, அவ்வரசனைநோக்கி, "தில்லைவனமத்தியுள் நன்மைத்தாய வாவியொன்றுள" தெனக் கூறினன். அவன் அது கேட்டபொழுதே மகிழ்வுற்று, அவ்வாவியினையெய்தி, நீர்பருகித்தாகந் தணிந்து மீண்டுபோம்பொழுது, அதனருகின்கண்ணுள்ள தில்லைமரநீழலின்கீழ், புலிவடிவமும் பாம்புவடிவமுமுடையராய முனிவரிருவர், எழுந்தருளியிருந்து தவஞ்செய்தலைப்பார்த்து, வியப்பச்சங்களுடையானாய், அவர்க்கண்மைத்தாய்நிற்புழி, அவர் மூவிடத்து முக்காலஇயல்பும் உணர்ந்துடையராகலின், அவனெண்ணக்குறிப்பைத் தாமுணர்ந்து, "சிங்கவருமனே! ஈண்டு வருக" வென அழைத்தனர். அமிர்தம்போலும் அவ்வினியவசனத்தினைக் கேட்டு, அவன் பேரின்பமுற்று, அடியற்றமரம்போற் புவியில்விழுந்து, அட்டாங்கவணக்கஞ்செய்து, பேரன்புடனின்றனன். அப்பொழுது அம்முனிவரர்பார்த்து "அரசனே! நீ மனுநூலுள் விதித்தவிதி வழுவாதொழுகுவோனாகலின், யாம் நின்

ஊக் காண்டற்குப் பெருவேட்கையுற்றிருந்தகம்; இற் றைஞான்று அது கைகூடப்பெற்று" மென உபசார வச னங் கூறினர். அப்பொழுது அவனும் "நும்மையொத்த யோகமுடையாரது தரிசனம், எந்தஞான்றெய்துமோ வென, பேரவாவுடையனுய எனக்கு, அது இற்றைஞா ன்று கைகூடியது; இப்பேற்றினும் மிக்கபேறு பிறிதுள தோ! அது நிற்க; யாடுென்று கூறுவல்; அது மற்றென் ஊயோவெனின் அடியேற்கு ஓர் குறைபாடுளது; அதஊ நுமது காருண்ணியத்தானே ஒழித்தருளுக"வென வேண் டிக்கொள்ள, அவரும் அவஊநோக்கி, "அஃதியாமறிந் தனம்; அது, நின்வடிவின்கண்ணதாய மாசேயாம்; அது பற்றி அரசஇலக்கணம் குறைபட்டதென நீ துன்புறுகின் றஊ; அதற்கு மோசனகாலம் அண்மைத்தாயது; ஆகலின் நீ இவ்வாவிநீருள் ஆடல்செய்யின், அப்பொழுதே நின் ஞெய்திர்ந்து, உடம்பெல்லாம் தூயதாகு" மென ஆணைசெ ய்தனர். அங்ஙனம் அவனும் அதனுளாடியெழுந்துழி, அங் ஙனமே தேகமுழுதும் பொன்மயமாகப் பெற்றனன். அ வனதஊப்பார்த்து, பெருவியப்புற்று மகிழ்ந்து அம்முனி வரரது பாததாமரைகஊ வணங்கித் தோத்திரஞ் செய் தான். அப்பொழுது அவரும் அச்சிங்கவருமனுக்கு, இர ணியவருமனென நாமகரணஞ் செய்தனர். அந்நாமம்பெ ற்ற அவனும், தவவிசேடமுடையராய அவ்விருவரையும் பார்த்து, "இவ்வனத்துள் நீவிர் தனித்துவைகுதற் கேது வென்ஊ"பென வினவ, அதுகேட்டு மகிழ்ந்து அவர் "நீ சிவபத்தியுடையனுகலானும், அரசருள்வைத்துப் பெரிய னுகலானும், அதஊ விளங்கக் கூறுதும் கேட்டுக்கொள் ளுக; இத்தில்லைவனமோ பரமரகசியமாயமுத்தித்தலம்; இத் தீர்த்தமோ நேர்பட்ட சிவனதுவடிவம்; அவ்வேதுவானே

அது சிவகங்கையென்னு நாமதேயமுடையது. இது இப்பெற்றித்தாய திப்பியத்தலமாகலான், நாமிருவரும் நீண்டநாட்டுணையும், ஈண்டுத்தவஞ்செய்திருக்கின்றோம்; நமக்கு நடேசபிரான் அகண்டானந்த சிதாகாயத்துள் நடஞ்செய்தருளுகின்றான்; அதனை இடையறாது தரிசனஞ்செய்திராநின்றோம்; இதுவே எது" வெனக் கூறியருளினர். அவன் அதுகேட்டமாத்திரையே பேரின்பக்கடலுண்மூழ்கி, வியப்புற்று, யான் இனி யென்ஞான்றும் இம்முனிவருடன் வசித்து, அவரிட்டஏவல்செய்து, அவர்காணும்நடத்தையுந் தரிசித்து, ஆன்மலாபமெய்துவலெனச் சிந்தித்து, அவ்வெண்ணத்தினை அவர்க்குக் கூறி வேண்டிக்கொண்டனன். அவர் அவனைப்பார்த்து, "நீ இராஜனாகி, உலகத்தில் எல்லாவுயிரையுங் காக்குந்தகுதியுடையனாயும், அஃதோர் பொருளன்றென விடுத்து, வனத்துட்சரித்தல்வேண்டுமென இங்ஙனங் கூறுதல் தகா"தென மறுப்ப, அவன் "நம்மாணைவழியே நடாத்துகின்றேன்; என்மனதின்கண்ணோரிச்சை நிகழ்கின்றது; அதனை முடித்தருளுக" வென வேண்டிக்கொள்ள, அவர் அஃது இஃதென விளங்கக்கூறுகவென ஆணை செய்தனர். அவன் "நமக்கு நடேசபிரான் காட்டியருளும் அத்திப்பிய நடனத்தினை, அடியேனுங் கண்டின்புறுமாறருளுக" வென வேண்டிக்கொள்ள, அவரதற்குடன்பட்டு, சச்சிதானந்த வடிவமுடைய நடேச சந்நிதானத்துப்போய், அதனைக்கூறி வேண்டிக்கொள்ள, அவன் அருள் வடிவமுடையனாகலின், அவர் வேண்டுகோட்கிரங்கி அங்ஙனமாடியருளினன். அந்நடத்தினை அவருடன் அவ்வரசனுங் கண்களிக்குமாறு காணப்பெற்று, பேரின்பக்கடலுண் மூழ்கி மெய்ப்புளகமுற்று, அருவிபோல் ஆனந்தக்கண்ணீர்பொழிய, பதைபதைத்தாடிப்பாடிப் பர

வசமாய்ப் பெருமகிழ்வுற்று, அம்முனிவரிருவரையும் வணங்கி, இனி அடியேன் செயற்பாலதாய பணி யிஃதென ஆணைசெய்கவென வேண்டிக்கொள்ள, அவர் அவனைப்பார்த்து, "இரணியவருமனே! இத்தலமோ, ஏனைத்தலங்கட்கெல்லாம் முடிமணி யொப்பதாய், உயிர்கட்கெல்லாந்தரிசனமாத்திரையானே வீடு பயத்தற்பாலதாகலின், ஈண்டு ஆலயப்பணி முதலிய பணிகள் செய்து முடித்து, இதனை யாண்டும் யாவர்க்கும் புலனுமாறு மிக்குபுகழச் செய்குக" வெனக்கூறினர். அவனும் அவ்வாணையை யேன்று கொண்டு, ஆலயப்பணி முதலிய எல்லாப்பணிகளையுஞ் செய்துமுடித்து, சிற்பநூலுடையானை ஆண்டழைத்து நடேச வடிவமொன்று செய்யுமாறு, அவர்க்காணைசெய்து தாம்பிரங்கொடுக்க, அவரும் அதனைச்செய்து முடித்தனர். திப்பியமாய அவ்வடிவத்தினது பேரழகினை, இரணியவருமன் பார்த்து, கண்களியுற்று, இவ்வடிவுபோற் பிறிதோர் வடிவம் பொன்னாற் செய்யின், அது இதனினும் மிக்க பேரழகிற்றுமெனக் கருதி, அது செய்யுமாறு மறித்தும் அவர்க்காணைசெய்து பொன்கொடுக்க, அங்ஙனமே அது செய்துகோடற்கு மறித்துங் கருவமைத்து, பொன்னைக் குகையுளிட்டுருக்குழி, நடேசபிரான் ஓர் விருத்த சந்நியாசிவடிவங்கொடு ஆண்டுப்போந்து, அச்சிற்பநூலுடையானை நோக்கி, நீவிர் ஈண்டியாது செய்கின்றனிரென வினவ அவரும் அவனை நோக்கி, அரசனாணையானே நடேசவடிவமொன்றனை இத்தலத்திற்கு, பொன்னினாற் செய்யாநின்றேமென்க் கூறக்கேட்ட அவனும், இப்பேரறத்தினுக்குதவுமாறு என்மாட்டுப் பொன்னொன்றுமிலதே யெனத் துன்புற்று, அதனையவர்க்குங்கூறி, தன் மாட்டுளதாய கந்தையாடைபொன்றனை உதறும்பொழுது, அதினின்றும்

செப்புக்காசொன்று கீழே விழுந்தது. அவன் அதனை யெடுத்துக்கொண்டு, அவரைப்பார்த்து, எனதிக்கா சொன் றனையும் இப்பொன்னுடன் சேர்த்து, எனக்கும் சிறிது சிவபுண்ணியம் கைகூடுமாறு செய்தல் வேண்டுமெனக் கூற, அவர் அவனைப்பார்த்து, நீ நன்று சொற்றிலையே; செம்பினைப் பொன்னுடன் சேர்த்துக்கோடல் தகாதென மறுப்ப அவனும் மறித்துமறித்தும் பலவேறுபட்ட இனிய மொழிகள் கூறி, எவ்வாற்றானுயினும் எனக்கிது செய்தல் வேண்டு மென வேண்டிக்கொண்டனன். அப்பொழுது அவ ர்க்கெல்லாம் தலைமையுடையாரொருவன் அவன் துன் புற்று மிகவும் வேண்டிக்கோடற்கிரங்கி, எண்ணிறந்த பொற் காசுடன் செப்புக்காசொன்றனைச் சேர்க்கின், தம் முள் வேறுபட்டு அதனிறம் பிறர்க்குப்புலப்படா தெனச் சிந்தித்து, அதனை வாங்கி அவற்றுடன் விரவுமாறு செய் தனன். பின், உருக்கியதங்கத்தினைக் கருவினுள் நிறைத் தனர். அவன் அப்பொழுது கரந்துபோயினன். அவர் அவ்வடிவத்தினைப்பார்க்கும்பொழுது அது தாம்பிரமயமா யிருந்தது. அவ்வாறிருத்தலை பின் அரசனும் பார்த்து இங்ஙனமாதற்கேதுவென்னை யென வினவ, அவரொன் றுங்கூறுதொழிய, பெரிதும் வெகுளிகொண்டு, பொன் னைக் கவர்ந்துகொண்டு தாம்பிரத்தானே செய்தார் போ லுமெனக்கருதி, அவரை யெல்லாம் தளைபூட்டி வைத்து, பின்னர் இங்ஙனமாதற்கேது இஃதென வறியாது, அதனை யறிந்துகோடற்கு நடேசபிரானைச் சிந்தித்துக்கொண்டு உண்டியின்றி உறக்கஞ்செய்துழி அழகிய திருச்சிற்றம் பலமுடையார் மறித்தும் அச்சந்நியாசவடிவங்கொடு, அவ னது சொப்பனத்தின்கண் எழுந்தருளி, இரணியவருமனே! நீ முதற்கண் தாம்பிரத்தான்வார்த்த என்மாட்டு விரு

ப்பின்றி மறித்தும் பிறிதொன்றனை பொன்னாற்செய்து கோடற்குத் தொடங்கினை; பொய்மைமிக்க இக்கலியுகமுடையார்க்கியைபுமாறு, யான் இவ்வடிவங்கொண்டுபோந்து செப்புக்காசொன்றனையீந்து, பொன்னுடன் சேர்க்குமாறு கூறினேன். சிற்பநூலுடையரெல்லாம், அதனை அவற்றுடன்சேர்த்தல் தகாதென மறுத்தனர். அப்பொழுது அவருட்டலைமையுடையானொருவனை, எனது துன்பத்திற்கிரங்குமாறுசெய்தேன். ஆகலின் அவன், அதுகுற்றமுறாதென வாங்கி அதனை யவற்றுடனிட்டனன். அதுபற்றித்தான் அது தாம்பிரமயமாயிற்று; இஃது மெய்மையாம். நினது கண்ணிந்தியத்துக்கு மாத்திரம் பொன் வடிவமாகும்; ஏனையோர்க்கு அங்ஙனமாகாதென ஆணைசெய்து கரந்துபோயினன். அப்பொழுது அவன், கண் விழித்து வியப்புடையவனாய், பொழுது புலர்ந்தபின் சபைக்கட்போந்து, சிற்பநூலுடையாரை ஆண்டுவருமாறு செய்து, அவரைநோக்கி, நீவிர் நிகழ்ச்சியை மெய்மையே கூறுமினென வினவ, அவரும் கரவாது நிகழ்ந்தவண்ணங் கூறினர். பின்னர் அரசன் அக்கசாலையுட்போந்து அவ்வடிவத்தினை மறித்தும் பார்த்துழி அது பொன்மயமாய்த்தோன்றக்கண்டு, பெருமகிழ்ச்சியெய்தி பின்னரதனைப் பதிட்டைசெய்து தரிசித்துவணங்கி, அன்றிரவு கண்படை செய்துழி, அந்நடேசபிரான் அவனது சொப்பனத்தின்கண் எழுந்தருளி "அரசனே! நான் அன்பர்மாட்டவாவுடையனாகலின், அன்பனாய நீ எண்ணியாங்கே முற்றுறச்செய்தனன். பதிட்டை செய்யாதெஞ்சிய என்னை தென்றேசத்துக்கனுப்பிவிடின், நான் இச்சித்த தலத்துள் எழுந்தருளுவ"லென ஆணைசெய்து, பின்னர்த்தலைமைச்சிற்பன் மாட்டும்போந்து, அரசனுக்குச் சொப்பனத்தின்கண் ஆணைசெய்துளேன்; அவன் பிற்றைஞான்று என்னை நின்மாட்டுக்

கொடுப்பான். நீ அது பெரும்பாரமெனவருந்தற்க. நீ சுமக்கும்பாரம்எவ்வளவிற்று அவ்வளவிற்றாயிருக்குவல்; யான் இச்சித்தபொருணைமாநதிதீரத்துப் போந்தழி, நினக்குப்பாரம் மிகுதிப்படும், அப்பொழுது ஆண்டு வைத்து விடுக வென ஆணைசெய்து திருவம்பலத்துளெழுந்தருளினன்.

பொழுதுபுலர்ந்தபின், அரசன், நித்தியக்கிரியை செய்து முடித்து, திருவம்பலத்தினைத்தலைப்பட்டு, நடேசபிரானை, பேரன்போடு தரிசித்துவணங்கி, பின்னர், தலைமைச் சிற்பனை அழைத்து, கண்டகனு நிகழ்ச்சியை அவனுக்குக்கூற, அவனும், தான் கண்ட கனுநிகழ்ச்சியினைத் தாழ்மையோடுங் கூறினன். அப்பொழுது, அவரிருவரும் பெருவியப்புற்று, அவ்வடிவந்தங்கிய தானத்துட்போந்து அதனழகைப் பலமுறை பார்த்து மகிழ்ந்து, ஆடிப்பாடி ஆனந்தத்துள்மூழ்கி, அன்போடு தமதுகண்கள் களிப்புறுமாறு தரிசனஞ் செய்தனர். பின்னர், அரசன், பிரிதற்கரிய ஆருமையோடுங்கூடினவனும், அம்முதன்மைச் சிற்பனிடத்து வேண்டுந்திரவிய மீந்து, இந்நடேசவடிவத்தினைத் தென்றேசத்துட் கொடுபோதுக வென ஆணைசெய்தனன். அவனும் அப்பொழுது நீராடி, திருவெண்ணீறிட்டுக் கண்டிபூண்டு, அதனை வலஞ்செய்து வணங்கி, பெருமகிழ்ச்சியுற்று, இருநூலான் செய்த கல்லாடைப்பையினுள், அதனை யெழுந்தருளச்செய்து சிரமேற்கொண்டு, சிதம்பரத்தைநீங்கி, அப்பிரான் றிருவடிமறவாத சிந்தையுடையனாய், தென்றிசைநோக்கிப்போந்தழி, பொருணைமாநதிதீரத்து, தாருகாவனத்துக் கண்மைத்தாய சத்தியகிரிச்சாரலைத்தலைப்பட்டபொழுது, அவனுக்கு,தலைநெரிதற்கேதுவாய பாரமிக்கது. அப்பொழுது, அதனைப்

பொருத்துக் கோடற்காற்றலிலனுய்ப், புண்ணிய பூமி யெனப்படுந் திப்பியமாய சிஞ்சாவனத்தினது தென்னெ ல்லைமுடிவில் அங்கிமுதலியோர் காணுமாறு, அழகியகூ த்தாடியதாய அவ்விடத்து கீழே யெழுந்தருளுமாறுசெய் தனனெனச் சூதமாமுனிவன்கூறிப் பின்னர், முழுதுகண்ட ராமபாண்டியனுக்கு அழகியகூத்துக்காட்டிய வாற்றினைக் கூறுவான் றொடங்கினன்.

எ-வது விப்பவரலாறுரைத்த அத்தியாயமுற்றியது.

அ-வது முழுதுகண்டராமபாண்டியனுக்கு அழகியகூத்துக்காட்டியவாறுரைத்த அத்தியாயம்.

இங்ஙனமாய பின்னர், நடேசபிரான், தன்னை, மணவைமாநகரத்து முழுதுகண்டராம பாண்டியனனவன் தேடுமாறுசெய்தற்கூஉம், அச்செப்பறைத்தலத்துள் அங்கிமுதலியோர்காண ஆடிய அழகியகூத்தினை அவனுக்குக்காட்டுதல் செய்தற்கூஉம், திருவுளங்கொண்டவனுய் அச்சிற்பநூலுடையானுக்குஇளைப்புண்டாக்கி, அதனுன் அவன் கண்படை செய்யுமாறுசெய்து, தான் அப்பையுடன் மறைந்தருளினுன். அப்பால், சிற்பநூலுடையான், கண் விழித்துப்பார்த்து, அவ்வடிவம், தனக்குக் கண்கூடாகாமைபற்றிப் பதைபதைத்து, யாண்டுந்தேடியுங்காணுது, ஆண்டுத் துன்புற்றுழிற்பதைக்கண்டோர்சிலர், அந்நிகழ்ச்சியினைக் கேட்டுணர்ந்து, நீ ஈண்டுநின்று துன்புறுமாற்றுனவதென்னை? ஈண்டுத்தோன்றும் மணவைமாநகரினுள், அரசனெருவனுளான்; அவன் மாட்டுப்போந்து, இந்நிகழ்ச்சியை உணர்த்துவையாயின், அவனதனை ஆராய்ச்சிசெய்வானெனக்கூறிப்போயினர்.

அப்பொழுதுஅவனும்விரைவினின் ஆண்டுப்போந்து, அவ்வரசனது மாளிகைவாயிலையெய்தி, அதனைமுறையிட்டனன் அதனை அரசன்கேட்டுப், புறத்துப்போந்து, அவன் வருமாற்றினைச் சொல்லக்கேட்டு, மனங்கலங்கி, இங்ஙனமாதற்கேது வென்னைகொல்லென, மிகுதியுந்துன்புறு சிந்தையனாய்ப் பாடிகாவலவரையெல்லாம் அழைத்து, அச்சுறுத்தி நீவிர் விரைய யாண்டுந்தேடி,நடேசவடிவத்தினைக்,கொடுபோதருக வெனஆணைசெய்து, தானும் அச்சிற்பநூலுடையானோடு, அவ்வடிவம் மறைந்தழிப்போந்து, ஈண்டு வரற்பாலனாய சோரமுடையான் யாவன் எனக்கூறி, அவனுந் தானுந் தேடியுங்காணாது, மீண்டும் அவ்வடிவம்மறைந்தருளியதலத்தின்கட்போந்து, எந்தஞான்று நடேசவடிவம் ஈண்டெழுந்தருளுமெனநெல்வேலிநாதனாணையை இடையறாது சிந்தித்துளனாய அடியேனுக்கு, அப்பெருமானதாணை வழியே அவ்வடிவம்,ஈண்டெழுந்தருளப்பெற்றும், அதன்றரிசனம், எனக்குக் கிட்டாதவாறென்னைகொல்லோ வென, மிகவுந்துன்புற்று, அரசியலைவெறுத்து, உண்டியுறக்கமின்றி அப்பிரானையே சிந்தித்துக்கொண்டிருந்துழி, சிறிதுபொழுது மூர்ச்சையுற்றிருந்தனன். அப்பொழுது, அச்சிற்பநூலுடையான், முன்சிரசினின்றுங் கீழே எழுந்தருளச்செய்ததூஉம், பண்டைஞான்று விண்டு வாமதேவன் அகத்தியன் அங்கி முதலியோர்க்கு அழகியகூத்தாடியருளியதூஉமாய பரமஇரகசியத்தானமெனப்படும் அத்தலத்தின்கண்ணே உபநிடதத்துச்சியின்கணுள்ள மகாவாக்கியத்தினது இலக்கியப்பொருளாயுள்ளவனூஉம், அத்துவித சொரூபமாகுபவனூஉம், பரப்பிரமவத்துவாய் விளங்குபவனூஉம் எல்லாப்பொருட்குஞ்சான்று வடிவமாகுபவனூஉம் ர்நிவிகாரமாயும் நித்தியமாயுமுள்ளவனூஉம், சின்மாத்திர

தேஜோமயசாட்சாத்காரமுழுமுதற்கடவுளாய் விளங்குகின்றவனுடைமாய அநாதிமலமுத்தபதியாகிய பரமசிவன் இருநாலாயெய்த செந்நிறந்தங்கிய அக்கல்லாடைப்பையினைச் சுத்தமாயையே உள்ளடங்கியஇடமாகவுஉம் பிரணவமந்திரமேபீடமாகவுஉம், நாலுவேதங்களும் நாலுதம்பங்களாகவுஉம், இருபத்தெட்டாகமங்களும் இருபத்தெட்டுத் தம்பங்களாகவுஉம், பஞ்சபூதங்களும் ஐந்துதம்பங்களாகவுஉம், ஆறுசாத்திரங்களும் ஆறு தம்பங்களாகவுஉம், பதினெண்புராணங்களும் பதினெண் தம்பங்களாகவுஉம், இருநூற்றிருபத்துநாலுபுவனங்களும் மூடப்பட்ட இருநூற்றிருபத்துநாலுபலகைகளாகவுஉம், தொண்ணூற்றாறுதத்துவதாத்துவிகங்களும் தொண்ணூற்றாறு பலகணிகளாகவுஉம், சிற்சுகோதய திருவருள்விளக்கமே திருவாயில்களாகவுஉம், பரநாதமே மணிகளாகவுஉம், அவித்தையே கதவாகவுஉம், முத்திசாதகமாகிய திருவைந்தெழுத்துக்களே ஐந்துபடிகளாகவுஉம், அறுபத்துநாலு கலைஞானங்களே அறுபத்துநாலு கைமரங்களாகவுஉம், ஐம்பத்தொரு அக்கரங்களும் எண்பத்தொரு பதங்களும் வரிச்சுக்களாகவுஉம், இருபத்தோராயிரத்தறுநூறு சுவாசங்களும் இருபத்தோராயிரத்தறுநூறு ஓடுகளாகவுஉம் எழுபத்திராயிரம் நரம்புகளும் எழுபத்திராயிரம் ஆணிகளாகவுஉம், வாமை முதலிய நவசத்திகளும் மேலேயுள்ள ஒன்பது தூபிக்குடங்களாகவுஉம் அமையுமாறு சராசரங்கள்யாவுந்தோன்றி ஒடுங்காநின்ற சர்வபரிபூரண அகண்டதத்துவமான சச்சிதானந்த சிதாகாச பராசத்தியாகிய செப்பறைஅம்பலமாக்கித், தான் அப்பையின்கண்ணே எழுந்தருளியிராநின்ற வடிவத்தினை அதிட்டித்துச் சபாமூர்த்தியாகி, அகிலலோகமாதாவாகிய சிவகாமவல்லி

காணுமாறு, தேவதுந்துபி முதலிய வாத்தியங்களெல்
லாமொலிப்ப, சிருஷ்டி முதலிய ஐந்தொழில்களையும்
நடத்துவதாய அவ்வழகியகூத்தை ஆடியருளினார். அக்
கூத்தினொலியை அரசன் கேட்டுப் பதைபதைத்தெழுந்து
நின்று, வேதங்களாலும் எதுவும் திக்கும் காலமும் தான
முந் தெரிதற்கரிய தாண்டவ வைபவத்தைத் தரிசித்து,
"அழகியகூத்துடையோனே!" யெனப் பன்முறை அழைத்
துத் தழுவிக்கொண்டு, மிக்க ஆனந்தபரவசனாய்க் கண்களி
னின்றும் ஆனந்த அருவி சொரிய, உடம்பெல்லாம் உரோம
கூபங்கொண்டு இத்துணைத்தெனக் கூறற்கரிய இன்பக்கட
லுண்மூழ்கி, "முன்னைப்பழம்பொருட்குமுன்னைப்பழம்பொ
ருளே! பிரமன் தலையினை அரிதல்செய்தவனே! காமனைக்கா
ய்ந்தோனே! காலனை உதைத்தோனே! முப்புரதகனனே!
பன்றியன்னங்களாய் திருமால், பிரமன் இருவரும் அடிமுடி
தேடியுங்காண்டற்கரிய நடராசப்பரதெய்வமே! பாற்கடன்
மாட்டெழுந்த நஞ்சு தங்கிய கண்டமுடையானே! எல்லா
மங்கலங்களும் இயல்பினெய்தியுள்ளானே! யாண்டும் வியா
பகமாயியல்புடையானே! மங்களமாயதிருவடிவுடையானே!
செய்துஞ் செய்வித்து மெல்லாத்தொழிற்கும் வினைமுதலா
ய்நிற்கு முழுமுதற்கடவுளே!" யென இங்ஙனந்தோத்திரஞ்
செய்து, நீண்டநாட்டுணையுங்காணாது பின் அரிதிற்கண்ட
தாய்ப்பசுவைப் பிரியலாற்றாத ஆன்கன்றை ஒப்ப, நேரே
கண்கூடாய்த்தோன்றிநின்ற அப்பிரானைப் பிரிதற்கு விரு
ப்பிலனாயினும் அக்கடவுளாணைபானே ஒருவாறு அரிதிற்
பிரிந்து போய் தன்னகரத்தினைத் தலைப்பட்டானெனச் சூத
மாமுனிவன்கூறி, பின்னர் அவ்வரசன் ஆலயங்கட்டுவித்த
வாற்றினைக்கூறுவான்றொடங்கினன்.

அ-வது முழுதுகண்ட ராமபாண்டியனுக்கு அழகிய கூத்துக்காட்டிய வாறுரைத்த அத்தியாயமுற்றியது.

கூ-வது திருவாலயமியற்றியவா றுரைத்த அத்தியாயம.

பிற்றைஞான்று, முழுதுகண்ட ராமபாண்டியன், சிதபரத்தலத்தினின்றும்போந்த அச்சிற்பநூலுடையானை அழைத்து, அழகியகூத்துடையானுக்கும், நெல்வேலிநாத னுக்கும், காந்திமதிதேவிக்கும் ஆலயம் அமைத்தல்வேண் டும்; நீ அதற்குரிய பொருத்த முதலியவற்றைக்கூறுக வென ஆணைசெய்ய, அவன் அதுகேட்டுமகிழ்ந்து, சிற்பநூல்களை யெல்லாம் ஆராய்ந்து, அவற்றுள் விதித்தவாறே அவற்றை க்கூற, அதுகேட்ட அரசனும், எனது பொருள் இவ்வரு மைத்திருப்பணிக்குதவக்கிடைத்தது முற்றவிசேடமே யெனக்கருதி, அமைச்சரையெல்லாம் ஆண்டு வருமாறழைத் து, வேறும் ஈண்டுள்ள சிற்பநூலுடையாரை யெல்லாம் வருமாறுசெய்க வென ஆணைசெய்ய, அவர் அங்ஙனமே வருமாறுசெய்தனர். அவரையெல்லாம் அரசனோக்கி நீவிர் சிதம்பரச்சிற்பன் கூறியவாறே செய்யுங் கடப்பா டுடையீர்; அம்முறை வழுவின், நமக்குக்கொடுந் தண் டஞ்செய்குவலென அச்சுறுத்தி, வேண்டும்பொருளீந் து, அக்கினிசுரன் அகிலாண்டநாயகி இருவருந்தங்குமத் தலத்தி னண்மைக்கண்ணுள்ள மலையையெய்தி திருப்ப ணிக்குரிய தொழில்செய்க வென ஆணைசெய்து, பின்ன ர்த் தான செப்பறைத்தலத்துட்போந்து, மா, பலா, தெங்

கு, நாரத்தை, எலுமிச்சை முதலிய எண்ணிறந்த மரங்கணிறைந்துள்ள சோலையினை, அப்பதியினைச்சூழுமாறுசெய்வித்தனன். பின்னர்த்திருப்பணிக்குரிய கற்களையெல்லாம் சிற்பநூலுடையார் ஆண்டுக் கொடுபோந்திட்டனர். அப்பொழுது, கருப்பக்கிரகம், அருத்தமண்டபம், மகாமண்டபம், மணிமண்டபம், சீபலிமண்டபங்களும், திருமதில் திருக்கோபுரமுதலியனவும் அமைத்து, வேதாகமங்கண் முற்றுங் கற்றுணர்ந்த ஆதிசைவரையழைத்து, நெல்வேலிநாதன் அருளுமாணை வழியே எறும்புத்தொகுதிபோய்ப் புகுந்த குழியிடத்தைச்சூழக் கட்டப்பட்ட ஆலயத்துள், அக்குழியிடத்து அப்பிரானையும், ஏனையஆலயங்களுள், தேவி, நடேசபிரான் முதலிய ஏனைக்கடவுளரையும் பதிட்டைசெய்வித்து, கும்பாபிடேகமுஞ் செய்வித்துத்தரிசித்து, பெருமகிழ்ச்சி யெய்தித்தோத்திரஞ்செய்தனன். பின்னர், அங்கிப்புத்தேளாற் பண்டைஞான்று பதிட்டைசெய்யப்பட்ட அக்கினீசுரன் அகிலாண்டநாயகி இருவருமெழுந்தருளியிராநின்ற திருவாலயத் திருப்பணிகளையுஞ் செய்தவனாய், அவ்வரசன் இவையாவுக்கும் நித்திய நைமித்தியங்களாய பூசை உற்சவமுதலியனவுநடாத்தி, சூழ நந்தனவனங்களும் அமைவித்தனன். இப்பெற்றியெல்லாங் கண்டதேவர், செப்பறைத்திருநகருக் கொப்பதாக ஒருநகரும் நம்முலகத்திலும் இலதெனக்கூறினர். இங்ஙனமாக, அவ்வரசன் நடேசபிரானுவத்தற்கேதுவாய பணி பலவுஞ்செய்து, முக்காலத்திலும் அச்செப்பறையுட்போந்து தரிசனஞ்செய்து, நீண்டநாட்டுணையும் ஆண்டுவாழ்ந்து முடிவின்கண் அழகியகூத்துடையானது திருவடிநிழலைத் தலைக்கூடப்பெற்றனன்.

கூ-வது திருவாலயமியற்றியவாறுரைத்த அத்தியாய முற்றியது.

௰-வது இராஜவல்லிபுரமாயவாறுரைத்த அத்தியாயம்.

கலியுகத் தொடக்கத்தின்கண், பொருனைமாநதிக்குத் தென்னாங்கரின், மணவைமாநகருள், வேப்பமாலைதரித்த வீரசேனமகாராஜன் தீமைசெய்வார்க்குத் தண்டமும் நன்மை செய்வார்க்கு வரிசையு நல்கி அரசுசெய்துவருவானயினன். பின்னொருநான்று, இந்திரன் ஆண்டுப்போந்து அவ்வரசனைப்பார்த்து, என்னகரினுமின்னகர் சிறந்தோங்குதற்கேதுவென்னை யெனக்கடாயவழி, நடேசபிரான் அழகிய கூத்துச்செய்தருளுந் தலத்தினுக்கு, இஃது அண்மைத்தாதல்பற்றியாமென விடுத்தனன். அவன் தனதுபுயவலியானே எல்லாஅரசரையும் வெற்றிபெற்றநான்று, அவரனைவரும் ஆண்டெய்தி இறையளித்து வணங்கினர். அஞ்ஞான்று அவரெல்லாந் தங்குதற்பொருட்டு நடராஜன் என்னு நாமத்தின் இறுதிக்கண்ணதாய ராஜ என்னும்பதமும், சிவகாமவல்லி யென்னு நாமத்தினிறுதிக்கண்ணதாய வல்லியென்னும்பதமும் ஆகிய இவ்விருவேறுபதங்களும் தம்முளியைந்து, இராஜவல்லிபுரமென நாமமிடப்பெற்றுடையதூஉம், அக்கினீசுரனென்னும் பவளமலையின்மேல் அகிலாண்டநாயகி யென்னும் பைங்கொடிபடர்ந்தோடற்கு இடமாயதூஉம், கருப்பஞ்சாற்றின் சுவையையும், கனியதுசுவையையும், பாலதுசுவையையும், அமுதச்சுவையையுமொவ்வாது, அ

கிலாண்டநாயகியது வசனத்தினையொத்த சுவையுடைத்தாய நீர் நிறைந்த பொருனைமாநதியினது உத்தரஞாங்கரினுள்ளதூஉம், கமுகமரங்கள் கொடிமரங்களாகவூஉம், அவற்றது அடியிற்றங்கிய பயிர் கூர்ச்சமாகவூஉம், அவைமேற் படர், கொடி சூழக்கட்டிய கயிறுகவூஉம் பெற்று, இவை இங்ஙனந் தோன்றுதல், எஞ்ஞான்றும் அக்கினீசுரனது திருவிழாச்சிறப்பாமாறுபோன்று பொலியப்பெற்றுள்ளதூஉம், நீர்நிலை வேள்விக்குண்டமாகவூஉம், செங்கமலம் ஓமவங்கியாகவூஉம், மரங்களின் பூவினின்றொழுகுந்தேன் ஆகுதிசெய்யு நெய்யாகவூஉம், வண்டினொலி வேதமந்திரமாகவூஉம், இலை சிருக்கு சிருவமாகவூஉம் பெற்று, வேள்விச்சாலையையொத்து விளங்கப்பெற்றதூஉம், அக்கினீசானும் அகிலாண்டநாயகியும் வீதியுள் உலாப்போதருங்கால், தத்தம் வாயில்கடோறும், வாழை, கமுகு, தோரணம், பூம்பந்தல் முதலியவற்றானலங்கரித்து, வேதிகைமாட்டு அட்டமங்கல நிறைத்து, கமலங்களுள் தேங்காய், பழம், தாம்பூலமுதலியனவைத்து, நிவேதிப்பித்து, வணங்கு நாற்குலத்தாரும் முறையே வசிக்கும் சந்நிதி வீதியும், இரதவீதியும் அமையப்பெற்றுள்ளதூஉம், ஆண்டைக்கு நடுவண் கண்டிகையது நடுநாயகமணியொத்து சைவமென்னும் பயிர்தழைக்குமாறு அருள்நீர்பாய்ச்சி, பொய்ச்சமயமாய களை கட்டு, மெய்ஞ்ஞானத்தினை விளையச்செய்யும் அக்கினீசுரனும் அகிலாண்டநாயகியுமாய இருவரது ஆலயங்கள் அமையப்பெற்றுள்ளதூஉம், சமயம், விசேடம், நிருவாணம், அபிடேயங்கள், பெற்றுடையபுண்ணிய புருடர்கள் விரும்பி வசிக்கப்பெற்றுள்ளதூஉம், விநாயகப்பிரான், வீரபத்திரக்கடவுள், பத்திரகாளி, அய்யன், இவர்களான் எஞ்ஞான்றும் இடைய

ருது காக்கப்பெற்றுள்ளதூஉமாக வொருநகரமமைத்து, அவ்வரசனையெல்லாம் ஆண்டுத்தங்குகவென ஆணைசெய்ய, அவரும் அங்ஙனஞ்செய்தனர். இனி, அந்நகருள் வைகும் வேதியரனைவரும் தமக்குரிய அறுதொழிலன்றிப் பிறிது தொழில் செய்வதிலர். அரசர் தமக்குரிய நீதியினின்றும் வழுவி ஒழுகுதல் செய்வதிலர். வைசியர் தமக்குரிய தரும வழியானன்றிப் பொருளை யீட்டுதல் செய்வதிலர். நான்காம் வருணத்தார் தமக்குரிய உழுதல் முதலிய தொழில் செய்தலின் வழுவார். ஏனையோரும் தத்தமக்குரிய தொழிலன்றி ஏனைப்பாவத்தொழில் சிறிதுஞ்செய்யார். இங்ஙன், அவ்விராஜவல்லிபுரம் இன்னோரன்னபெருஞ்சிறப்பெல்லாம் அமைந்துள்ளது.

இச்செப்பறைமான்மியத்தினை, நாடோறும் அன்போடு விதிப்படி அருச்சித்து, படிப்போர், கேட்போர், சிந்திப்போரெல்லாம் இராஜபோகமும் நன்மக்கட்பேறுமெய்தி, தம்பகைஞரையும் வென்று, நோயுமின்றி நீண்டநாட்டுணையும் வாழ்ந்து, தேவபோகங்களுமெய்தி, முடிவின்கண் வீடுபேற்றினையும் தலைப்படுதலொருதலையாமென, இங்ஙனஞ் சூதமாமுனிவன் கூறியபொழுது, அம்முனிவரனைவரும் அவனை வணங்கி, அவனோடும் ஆண்டுநீங்கிச்செப்பறைத் தலத்துட்போந்து, பொருனைமாநதியை யெய்தி, தாண்டவ தீர்த்தத்துள்ளாடி, நடேசபிரான், சிவகாமவல்லி, நெல்வேலிநாதன், காந்திமதிதேவி, அக்கினீசுரர், அகிலாண்டநாயகி ஆகியஇவரையெல்லாம் பூசித்து வணங்கித்தோத்திரஞ்செய்து வேண்டிய வேண்டியாங்குப்பெற்றுநீங்கி,பொதியமலையையெய்தி, சாரங்கதீர்த்தமும், முக்களாதீர்த்தமுமாடி பின்னர்ப் பொருனைச்சங்கமத்துமாடி, சிவத்தலங்களையெல்லாம்

தரிசித்துப்போந்து, மறித்து நைமிசவனத்தைத்தலைக்கூடப் பெற்றனர்.

இராஜவல்லிபுரமாயவாறுரைத்த அத்தியாயமுற்றியது.

திருச்சிற்றம்பலம்.

அழகிய கூத்தனருட்பதம் பரவுக
பழகியபந்தம் பறைந்திட வுயிர்க்கே.

உ

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

செப்பறை அழகியகூத்துடையார் தோத்திராட்டகம்.

(இஃது,) இம்மான்மியத்து ௩௦வது அத்தியாயத்துள், நடராசப்பெருமான்மீது அக்கினிதேவனாற் செய்யப்பட்ட சுலோகவடிவமாய தோத்திரம், தமிழ் வசனவடிவான் ஆண்டுச்செய்யப்பட்டதாயினும், அஃது மனனஞ் செய்து போற்றிக்கோடற்கு எளிதாகாமையின் அங்ஙனமாதற் பொருட்டு, செய்யுள் வடிவமாகச் செய்யப்பட்டது.)

வீழுமன்பர்க் கருள்புரிவோய் மெய்ப்பரத்தூட் பரமாவோய்
நீளுநெற்றிக் கண்ணுடையோய் நேரிலயன் வழிபடுவோய்
வாழிபணைப்பதியாவோய் மங்களவின் புருவுடையோ
யாளுமழகிய கூத்தோ யடிபோற்றி போற்றியவே. (௧)

யதன்றேவி மனவருத்த மாற்றியவட்கருள் புரிவோய்
புதுமதுவச் செங்கமலப் பூவைபதி காதலிப்போய்
திதிபுரிநல் லரசரெல்லாஞ் செயுமிச்சைக் கிடமாவோ
யதுலவழ கியகூத்தோ யடிபோற்றி போற்றியவே. (௨)

பொருள்வடிவோய் தத்துவத்தின் பொலிசதா சிவவடிவோ
யருணித்தச் சான்றுருவோ யமரர்தம்முட்டலையா யோய்
பனைபொரு பாலின்வைத்தோய் பண்ணவருளாற்றலுளோ
யரியவழ கியகூத்தோ யடிபோற்றி போற்றியவே. (௩)

சந்தமலி மங்கைபங்கோய் நினதுபய சரணமெனுங்
கந்தமலி செங்கமலங் கண்டுபணி சுரர்நரர்க்குத்
தந்தமிச்சை தந்தருள்வோய் தாண்டவத்திற் றலையாயோ
யந்திலழகியகூத்தோ யடிபோற்றி போற்றியவே. (௪)

வேள்வியினல் வடிவுடையோய் வேட்போர்மேல் விழைவுடையோய்
தாள்யோக வடிவுடையோய்தவர் போற்றி செயப்படுவோய்
வீழ்நாத வடியோய்நா ரதனேத்த வீற்றிருப்போ
யாளெம்மழ கியகூத்தோ யடிபோற்றி போற்றியவே. (௫)

ஏவன்றன் பதமேத்தி யமரர்சித்த ரயனேனோர்
தாவிறந்தம் பதம்பெற்றா ரத்தன்மைத் தாயபல
தேய்வதிலா வாழ்வுமினைச் சேர்ந்தோருக் கீந்தருள்வோ
யாவினழகியகூத்தோ யடிபோற்றி போற்றியவே. (௬)

நமசிவய நன்மனுவை நயந்தொருகாற் சொல்வோர்க்குந்,
தமசதிலா வின்பருள்வோய் சங்கேந்துஞ் சத்தியுளோ
யமைதருமுக் கண்ணுடையோ யன்றினவர் புரமழித்தோ
யமலவழ கியகூத்தோ யடிபோற்றி போற்றியவே. (௭)

மணிதமுண்மா ணிக்கமொத்து மகிழ்செய்கதிர்த் தொகுதிபல
வணவுபதச் செங்கமல மார்ந்துளோய் கோடியெண்ண,
மிணையுமிள ஞாயிறுநேர் காந்திவடி வேய்தருவோ
யணையுமழ கியகூத்தோ யடிபோற்றி போற்றியவே. (௮)

திருச்சிற்றம்பலம்.

உ

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

செப்பறையிராஜவல்லிபுரம்

ஸ்ரீ அகிலாண்டநாயகி பதிகம்.

பண்டைவினை யானும்வரு பழவினையி னானுமுறு பாழ்த்தகன் மத்தினானும்
பாழாய மாயைப் புணர்ச்சியா னுந்தொலைவில் பலபல தனுக்கடுக்கிக்
கொண்டுசுழல் பாவியேன் செய்கின்ற பிழையெலாங் குணமெனக் கருதியெளிதாக்
கோலங்கள் காட்டியெனை யிவ்வள வெடுத்தாண்ட குணமேரு வேநிறைந்து
மண்டுமா னந்தவெள் ளத்தையுண் டின்புறவும் வைப்பதென் றோவறிகிலேன்
வானாகி மண்ணாகி மற்றுள வெலாமாகி மறைநான்கு மறியாமலே
யண்டபகி ரண்டப் பரப்புமா யப்புறமு மளவற்று நின்றுலாவு
மருண்ஞான வாரியே ராசைமே விபசெல்வ வகிலாண்டமென் னுமரசே. (௧)

கல்லொத்த நெஞ்சராய் வாழ்வர்சிலர் புவியிற் கறங்குசக டென்னவோடிக்
காலோய்வர் சிலர்மரப் பேய்போல நாடொறுங் கதறுவார் சிலர்குவிந்த

வில்லொத்த நுதலினர் போகத்தை நாடியே மெலிவர்சிலர் பசையிலாத
வெற்றென்பி னைக்கடித் தலகுபுண் ணாய்க்குருதி விழுமதைப் பருகுநாய்போற்
சொல்லற்றவுலகினுறு துன்பெலாஞ் சுகமாய்த் துடிப்பர்சில ரவர்களோடு
துடியாத வண்ணமெனை யிவ்வள வெடுத்திருட் டொகையெலா நீக்கியெல்லோ
டல்லற்றபேரின்ப வெள்ளத் தழுத்தியே யசைவற் றிருப்பவைத்த
வருண்ஞான வாரியே ராசைமே வியசெல்வ வகிலாண்ட மென்னுமரசே. (௨)

தூலவுட லரவினது தோலென்ன நீங்கவே சூக்குமந்தோடயிரினைத்
துன்பமுறும் யாதனை யுடலத் திருத்தியே சுடருமெரி வாயினிடுவார்
மேலதிற் கனலெனச் செம்பினை யுருக்கியே விடுவர்விழி தன்னினாசி
விம்முற விறக்குவார் நரகுதொறும் வெவ்வேறு விதமாக வூழியூழி
காலம தழுத்துவார் தலைபெழும் பிடினுச்சி கவிழுற வடிப்பரந்தக்
கனலொத்த யமதூதர் கையினடி யேன்றனைக் காட்டிக் கொடுத்திடாதே
ஆலமமு துண்டமரர் தமையாண்ட நீள்கருணை யன்னமே யுனைநம்பினே
னருண்ஞான வாரியே ராசைமே வியசெல்வ வகிலாண்ட மென்னுமரசே. (௩)

செம்புறு களிம்பென வணுதிமல மூழ்கியிருள் சேருமலர் விழியென்னவே
தெளிவற்ற கேவலத் தசைவற் றிருந்துமல சேட்டையாற் குமாவிகுருடர்

தம்பிணியி ஞனுற்ற பால்கோலே நோக்கவவை தமையளிப் பாளென்ன நான்
சார்கன்ம மாயையை விரும்ப நீ தந்திடச் சகலஞய்ச் சுழல்கறங்கு
பம்பரம தென்னநீள் பிறவிச்சுழிக்குளே பட்டுழல் பெரும் பாவியேன்
பாழாய மலமற்று வினையற்று மாயையின் பற்றுவிட் டுனையறிந்துன்
னம்பொனடி நீழல்சேர்ந் தானந்த முண்டோ னதுவா யிருப்பதென்றோ
வருண்ஞான வாரியே ராசைமே வியசெல்வ வகிலாண்ட மென்னுமரசே. (௪)

முன்னைமல மென்னுமொரு பேய்பிடித் திருவினை முதிர்ந்தவெறி யரவுசுற்றி
முடியாத பிறவிக் கடற்குள் வீழ்ந் தாசையென மூண்டசுழி வந்தமிழ்த்த
மின்னனைய மாதரொனு மகரமீனொருபுறம் விழுங்கவைம் பொறிகளாய
விறற்கரவ மைந்தும்வந் தெங்கணு மிழுப்பநான் வீணினே நைவதானேன்
பொன்னனைய நின்னடித் தாமரைத் தலமலாற் புகலிடம் பிறிதுகாணேன்
பொய்யனே னுயினுங் கைவிடா தாளுவாய் புவனங்கள் முழுதுயாவுமீன்ற
அன்னையே பகிரண்ட முகடெலாங் கனைபுரண் டப்புறமு மலைததும்பு
மருண்ஞான வாரியே ராசைமே வியசெல்வ வகிலாண்ட மென்னுமரசே. (௫)

இசைபொத்த பண்களுஞ் சொல்லினொடு பொருள்களு மிருளினொடு வெளியு மென்ற
வின்பமொடு துன்பமு நரகொடு சுவர்க்கமு மெண்ணுதற் கரியவாய

வசையுற்ற யோனிபே தங்களொடு மனைதம்முண் மருவுமுயிர் யாவுமோங்கு
மறைநான்கு வர்க்கமு மற்றுமுள கலைகளு மலைகட லெலாமுமலையுந்
திசையெட்டு மிரவியொடு சோமனுஞ் சமயத் திரட்சிகளு மொருவரானுந்
தேடரிய புவனகோ டிகளுமதின் வாழ்கின்ற தெய்வங்கள் பலவும் யாவு
மசைவற்ற பரவெளிக் குள்ளே யமைந்தவென் றறிவித் தெனைக்கலந்த
வருண்ஞான வாரியே ராசைமே வியசெல்வ வகிலாண்ட மென்னுமரசே. (௬)

நீயுள்ள தென்றன்று நானுமுள னென்றமுத னீங்காம லென்னிடத்தே
நேசம்வைத் தேநீ யிருப்பநான் மலமாகி நின்றதே துடலெனக்கங்
கேயுமுறை யெங்ஙனே வினைசுட ருமெனினவைக ளேறிடா தனுவிலாம
லெட்டாத கேவல மிருப்பமே லொருகன்மமேயா தவிச்சைகண்டு
காயம தளிப்பதெனி னின்புதுன் புறமுன்பு கன்மமே திதனையருள்வாய்
ககனமுக டெங்கடந் தளவில்புவ னங்களுங் கரைபுரண் டெங்குமோங்கி
யாயுமறை காணு தகண்டமாய் நின்றதிரு வக்கினீசுரர் மாநவுநீ
ளருள்ஞான வாரியே ராசைமே வியசெல்வ வகிலாண்ட மென்னுமரசே. (௭)

உடலத்தி னின்றெனக் கொழியாத விச்சைதா னுற்றதே துன்றனுனே
யுற்றதே னீதனு வளித்திடும் பொழுதெலா முறல்வேண்டு மென்றனியல்பேற்

கடலொத்த பிறவிதனி னெந்நாளு மவ்விச்சை கட்டுற்று நிற்றல்வேண்டுங்
கடியமல சத்திசற் றகலவரு மெனினவை கழித்ததார் நீ கழிப்பிற்
கெடலுற்ற வெல்லா வுயிர்க்குநீக் குவையான் கெடுத்தாலு மம்மலந்தான்
கெட்டாலு முன்னைநான் கிட்டிவழி படுவதென் கேடிலா யிவையருளுவா
யடலுற்றதிரி புரமடங்கலு மெரித்ததிரு வக்கினீ சுரனைமருவு
மருண்ஞான வாரியே ராசைமே வியசெல்வ வகிலாண்டமென்னுமரசே. (௮)

மங்கையர்க ளின்பமே முத்தியென் றுங்கந்த மடிவதே முத்தியென்றும்
வருமுக் குணங்கெடுதன் முத்திவினை மாய்வதே வளர்முத்தி மூன்றுமலமும்
பங்கமுற லேமுத்தி யென்றுநித் தியதனுப் பற்றுவது முத்தியென்றும்
பலவும் பகுத்தறிதன் முத்தியுயிர் கெடுவதே படர்முத்தி சித்திகளெலாந்
தங்குவது முத்திபா டாணமொத் திடுவதே தகுமுத்தி யென்றுமுயிர்க
டடுமாற மலமறுத் தகலாத திருவடித் தாமனாயென் முடியினூன்றி
யங்கமுயிர் பொருளெலாங் கைக்கொண்டு நாயினேற்கானந்த முத்திதந்த
வருண்ஞான வாரியே ராசைமே வியசெல்வ வகிலாண்ட மென்னுமரசே. (௯)

பூதமே யென்றும் வரு பொறியென்று மனமாதி பொருளென்று நீள்காதி
பொருளென்று முயர்சுத்த மாயை பொரு ளென்றுமிப் புவியீற் சிருட்டி செய்யு

நாதர்பொரு ளென்றும்ர வணையிற் றுயின்றவொரு நாரணன் பொருள் தென்று
நானுவிதங்கு மூறிவோர் குருடர் பலர் கூடி நாடியொளி தேடுமாபோற்
பேதமுறு பிறவியுட் சுழல்வதல் லானுண்மை பெறுமாறு முளதோ சொலாய்
பின்னுமுன் னும்பக்க மேல்கீழு மாயண்ட பித்திக ளுடைத்து மண்டி
யாதிநடு வந்தமு மிலாமலடி நாயேனை யகலாம லாண்டுகொண்ட
வருண்ஞான வாரியே ராசைமே வியசெல்வ வகிலாண்ட மென்னுமரசே. (௰)

ஸ்ரீ அகிலாண்டநாயகி பதிகம் முற்றிற்று.